திராவிடநாடு

26—3—61 | வாரவெளியீடு | விலை 16 காசு

# நாம் சாவதா?

—[ நாஞ்சில் ஆ. ஆரிது ]—

பனி பெய்து ஆறோடுமா?—வெறும்
பதர் வெந்து சோறாகுமா?
மனக்கோட்டை விலை போகுமா?—தொலை
வட நாடு தென்னாட்டை வாழ்விக்குமா?

கடல்நீரில் பயிர் வாழுமா?—தாகம்
கழிநீரில் கரைந் தோடுமா?
கடல்மிஞ்சப் பொருள் சேருமா?—வட
கல்நெஞ்சம் தென்னாட்டை வளமாக்குமா?

கண்ணுக்கு மண் தோழனா?—எழில்
கன்னிக்கு கிழம் ஆளனா?
தண்ணுக்கு வெயில் சுற்றமா?— பெருந்
தமிழ்நாட்டை வாழ்விக்க வடகொற்றமா?

பஞ்சுக்கு நெருப்பாகுமா?—பசும்
பாலுக்கு உப்பாகுமா?
கஞ்சிக்கு நஞ்சாகுமா?—தமிழ்
கண்டோர்க்கு மறுமொழிகள் துணையாகுமா?

மலருக்கு கவி காவலா? –தமிழ்
மகனுக்கு வட ஏவலா?
பலிபீடம் நமதாவதா? – வளம்
பலபெற்று அவர்வாழ நாம்சாவதா?

# வேலை கிடைத்தது!

—[அன்பு. த. நாராயணசாமி]—

முருகனை, இன்று நேற்றல்ல, அவனுடைய சிறுவயதிலிருந்தே எனக்கு நன்கு தெரியும். வள்ளியை மணந்த முருகப்பெருமானைக் குறிப்பிடவில்லை! என் பள்ளித்தோழன் முருகனைத்தான் குறிப்பிடுகிறேன். உடன் பிறந்த சகோதரனாக அவன் இல்லாவிடினும், 'அந்தப் பாசம்' சிறிதும் குறையாமலிருந்தது, எங்களிடையே!

சின்னஞ்சிறு வயது முதல் நாங்களிருவரும் ஒன்றாகவேதான் கல்வி பயின்றோம். எங்களூர்ப் பள்ளிப் படிப்பு (எஸ். எஸ். எல். சி.) முடிந்ததும், நான் கல்லூரியில் சேர்க்கப் பட்டேன் — பணமிருந்த காரணத்தால்! ஆனால், அவனோ கல்லூரிப் படிப்பைப் படிக்கமுடியாத ஏழை! அவனுடைய தகப்பனார் சம்பாதிக்கும் அன்றாட வருவாயைக்கொண்டுதான் அந்தக் குடும்பம் காலம் தள்ளியது. படிப்பில் அவனும் கெட்டிக்காரன்தான். நாங்களிருவரும் தேர்வு சமயங்களில் போட்டி போட்டுக்கொண்டு பாடங்களைப் படித்த அந்த நாட்களை நினைத்துக் கொண்டாலே இன்பமாக இருக்கும்.

ஒரு சமயம், நான் பி. ஏ. முதலாண்டுக் கால்வருடத் தேர்வை எழுதிவிட்டு ஊருக்குச் சென்றிருந்த போது, முருகனைச் சந்தித்துப் பேசினேன்.

“என்ன முருகா, எந்த வேலையிலாவது சேர்ந்திருக்கிறாயா?” என்று கேட்டேன்.

“இல்லேப்பா! அன்றாடம் கிடைக்கும் வேலையைச் செய்துதான் பிழைத்து வருகிறேன். 'சொத்து' என்று சொல்லிக்கொள்வதற்குக் கூட ஒரு சிறிதும் வைக்காமல், என் தகப்பனார் போய்விட்டார் நண்பா! இப்பொழுது, இந்தக் குடும்பப் பொறுப்பு அனைத்தும் நானே ஏற்றிருக்கின்றேன். நீ எப்படியாவது, தயவுசெய்து, எனக்கொரு வேலையைச் சென்னையிலே பார்த்துக் கொடுக்கிறாயா? ஏதோ, நண்பன் என்ற முறையில் உன்னை மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். தயவுகூர்ந்து கவனிப்பாயா?”

அவன் வேண்டுகோளுக்குச்செவி சாய்த்தேன். ஆனால், அதை நிறைவேற்றித் தரும் வல்லமை என்னிடம் இல்லையே! சரி, எப்படியும் அவனுக்கு ஒரு வேலை வாங்கித்தரவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில், “முருகா, இப்போ, நான் சென்னைக்குப் போகும்போது, என்னுடனேயே வா! எனக்குத் தெரிந்த ஓரிரண்டு இடங்களில் கேட்டுப்பார்க்கிறேன். அங்கு முடியாவிட்டாலும் பரவாயில்லை. வேலை தேடித்தரும் அலுவலகத்தில்உன்பெயர், படிப்பு, விரும்பும் தொழில் இவைகளை எழுதிவைத்து விட்டு வந்தால், உடனே உனக்கு வேலை கிடைக்கும்!” என்றேன்.

வாழைப்பழம் கேட்ட சிறுவனுக்கு வாழைப்பழத்தோடு, ஆப்பிள் பழமும், ஆரஞ்சுப்பழமும், திராட்சைப் பழங்களையும்சேர்த்துக்கொடுத்தால் எப்படியிருக்கும் அச்சிறுவனின், உள்ளம்? அத்தகையதாகவே அமைந்தது, என்னருமை நண்பனுக்கும் நான் சொன்ன விபரங்களைக் கேட்டதும்!

மறுவாரம், நானும் முருகனும் சென்னைக்குச் சென்று வேலை தேடித் தரும் அலுவலகத்தில் முருகனின் பெயரைப் பொறித்துவிட்டு வந்தோம். அவனுக்காகச் சென்னையெங்கும் சுற்றியும் ஒரு வேலையும் கிடைத்தபாடில்லை; கையிலிருந்த காசுதான் செலவானது!

முறுக்கோடு வந்த முருகன் சோர்ந்த உள்ளத்தோடு வீடு திரும்பினான். அவனை அனுப்பிவைக்க நான் பட்டபாடுகொஞ்சமா, என்ன?

ஊருக்குப் போனவன் மனம் சென்னையிலேயே சுற்றிக்கொண்டிருந்ததை, அவன் வாரத்திற்கொரு முறை எழுதிய கடிதங்களே சாட்சியாகும்! அவனுக்குப் பதில் எழுதுவதே எனக்குப் பெரிய வேலையாகி விட்டது. நல்ல வேளையாக, அன்று அவனுடைய அளவுக்கு மீறிய வருத்தத்தைக் கொணர்ந்த அவனுடைய கடிதம் வந்த அன்றுதான், வேலை தேடித் தரும் அலுவலகத்திலிருந்து 'பேட்டி'க்கான ஒரு அஞ்சல் அட்டை வந்திருந்தது. அதை உடனே முருகனுக்கு அனுப்பி வைத்தேன். அவனும் வந்தான். பேட்டி நடந்தது. முடிவு இரண்டு வாரங்களுக்குப் பின்தான் தெரியும் என்றனர். சரியென்று, முருகன் முதல் தடவையாகச் சிறிது மகிழ்வோடு வீடு திரும்பினான்!

பெண்ணைப் பார்த்துவிட்டுச் செல்லும் பிள்ளை வீட்டுக்காரர்கள், 'ஊருக்குப் போய்க் கடிதம் போடுகிறோம்' என்று சொல்லிவிட்டு, ஊருக்குப் போனபின் மௌனம் சாதிப்பதைப் போன்றே, இந்த அலுவலகமும் இரண்டு வாரங்கள் ஆகியும் மௌனம் சாதித்தது. அவனுக்கு வேலை கிடைக்கவில்லை என்பதை உணர்ந்து கடிதம் எழுதினேன்.

அவன் அதன் பிறகும் சளைக்கவில்லை. தன் பெயரை மறுபடியும், மறுபடியும் புதுப்பித்துக்கொண்டான். ஒரு நாள், 11-வது தடவையாகப் பேட்டி நடந்தது. 15 தடவைகள் தோல்வியுற்றும், மனம் தளராமல் 16-வது தடவையாகப் போட்டி போட்டானே, ஒரு சுல்தான்! அவனைப்போல, இவனும் அந்த அலுவலகத்தின்மீது படையெடுத்தான்! அவனுக்கு அந்தக் கடைசிப் பேட்டியின் போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எப்படியும் தனக்குக் கிடைத்துவிடுமென நம்பினான். ஆனால்; அந்தோ! அவன் நம்பிக்கை முழுவதும் தீயிலிட்ட நெய் ஆனதே! அவன் என்ன செய்யமுடியும்? அவனுக்கு யார் இருக்கிறார்கள், பரிந்துரை பேச! அவனுக்குக் கிடைக்க வேண்டிய அந்த வேலையை யாரோ, ஒருவன் அடித்துக்கொண்டு போய் விட்டானாம்! அடித்துக்கொண்டு போனவன், அப்பொழுதுதான் புதியதாகப் பெயரைக் கொடுத்தவன். இருந்தாலும், அவன் பக்கத்தில் தானே மாநில அமைச்சர்களின் 'பார்வை' இருந்தது! மந்திரிகளின் துணையைப்பெற்றஅவனுக்கு வேலை

( 4-ம் பக்கம் பார்க்க )

# மதுபான பர்மிட்!

மலர் 19] ஆண்டு சந்தா ரூ. 8 (26—3—61) தனிப்பிரதி 16 காசு [இதழ் 3

மதுரை மாவட்டத்திலுள்ள கோடைக்கானலுக்கும், நீலகிரிக்கும் சுற்றுலா வருவோர் தொகை அதிகரிக்கும் வகையில், அப்படி வருபவர்களுக்கு ஊக்கமளிக்க எந்த முறையைக் கையாளலாம், எப்படி வழிவகைகளை உண்டாக்கலாம் என்று அரசாங்கம் யோசித்துப் பார்த்ததில், மதுபான பர்மிட்டுகளை வழங்குவதில் தாராளம் காட்டுவது ஒன்றுதான் அதற்கு ஏற்றவழி என்று கண்டுபிடித்து, மதுரை, நீலகிரி மாவட்ட ஆணையாளர்களுக்கு மதுபானப் பர்மிட்டை வழங்கும் அதிகாரத்தை அரசாங்கம் அளித்திருப்பதாக ஒரு செய்தி வந்துள்ளது.

மருத்துவ முறைப்படி மதுபானம் அருந்தியாக வேண்டுமென்ற நிலையில் இருப்பவர்கள், கோடைக்கானலுக்கும் நீலகிரிக்கும் வர நேரிட்டால், அவர்கள் மதுபானம் கிடைக்காது அவதிப்பட நேரிடுமே என்று எண்ணி, அவர்கள்பால் **இரக்கம்** கொண்ட சென்னை அரசாங்கம் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறதாம்.

மருத்துவ முறைப்படி மதுபானம் அருந்திக் கொண்டிருந்தால்தான் உயிர்வாழ முடியுமென்ற நிலையில் இருப்பவர்கள் எத்தனைபேர்? அப்படி மதுபான பர்மிட் வாங்கி வைத்திருப்பவர்களில் எத்தனைபேர் முன்னாள் மதுவருந்தியவர்கள்? எத்தனைபேர் புதிகாக மது அருந்துபவர்கள்? மதுபானம் அருந்தி நோயைக் குணப்படுத்தும் நிலையில் இருப்பவர்கள் எத்தனைபேர் என்ற புள்ளிவிபரங்களைக் கண்டறிந்து, உண்மையிலேயே நாட்டுக்கு நல்லதென்று கருதிச் செய்யப்பட்ட மதுவிலக்கு, இந்தத் தேவையற்ற — விரும்பத்தகாத ஏற்பாடுகளினால் எந்த அளவுக்குத் தோல்வி அடைய வழிவகை செய்கிறதென்பதை ஆராய்ந்தறிந்து ஆவன செய்யவேண்டுமென்ற நிலையிலுள்ள அரசாங்கம், மது அருந்துவோரின் தொகையை அதிகரிக்கச்செய்யும் முறையிலா காரியங்களை நடத்த முற்படுவது?

நோய்வாய்ப்பட்டவன் மதுவருந்தித்தான் தன் நோயைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்றால், எத்தனையோ கோடிக் கணக்கில் செலவுசெய்து கண்டுபிடிக்கப்பட்ட, எண்ணிக் கணக்கிடமுடியாத மருந்து வகைகளோடு இந்த மதுபானத்தையும் ஒரு மருந்தாகக் கருதி எல்லா மருந்துநிலையங்களிலும் வைத்துக்கொண்டால், யாருக்கு மதுபானம் தந்தால் நோய் நீங்குமென்று மருத்துவர் கருதுகிறாரோ, அவருக்கு மதுபானத்தையும், மற்ற நோயாளிகளுக்கு வேறு மருந்துகளையும் கொடுத்துவிடலாமே!

இங்ஙனம் செய்வதைவிட்டு, நோயாளிகளில் ஒரு சிலரைத் தனியாகப் பிரித்து, அவர்களுக்கு மதுபானம் அருந்தும் உரிமையை வழங்குவதாகச் சொல்லப்படும் முறையற்ற செயல்போன்ற கெடுதல் வேறேதும் இல்லை என்று கூறலாம்.

ஏன் இப்படிக் கூறுகிறோமென்றால், நோயைக் காரணங்காட்டி மதுபான பர்மிட் வாங்கியவர்களில், இதுவரை, எத்தனைபேர், "எங்களுடைய நோய் தீர்ந்து குணமாகிவிட்டோம்; இனி, எங்களுக்கு மதுபான பர்மிட் தேவையில்லை" என்று கூறி அவர்களிடமுள்ள பர்மிட்டைத் திருப்பித் தந்துவிட்டார்கள் என்ற புள்ளி விபரத்தை அரசாங்கத்தால் காட்டமுடியுமா என்பதை அறியவே இதனைக் குறிப்பிடுகிறோம்.

உத்தமர் காந்தியடிகளால் ஏற்படுத்தப்பட்ட நல்ல பல திட்டங்களில் இந்த மதுவிலக்கும் ஒன்றாகும்.

இதற்கு ஊறு உண்டாக்கும் எந்த முறைகளையும் காந்திவழி நிற்பதாகக் கூறிக்கொள்ளும் காங்கிரஸ் ஆட்சியினர் மேற்கொள்ளலாமா?

மது அருந்துவதற்குப் பர்மிட் வழங்குவது என்ற ஏற்பாடு, உண்மையிலேயே நோய்வாய்ப்பட்டவர்களுக்காகச் செய்யப்பட்டதா, அல்லது மாஜி மது அருந்துவோரில் சிலரையாவது இந்த ஏற்பாட்டின் மூலம் திருப்திப்படுத்தலாம் என்ற நோக்கத்துடன் செய்யப்பட்டதா என்றுகூட யோசிக்கத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு அந்தப் பர்மிட் வழங்கும் முறை தாராளமாக்கப்படுகிறதென்றே கருதவேண்டியிருக்கிறது.

மதுவிலக்கில் உண்மையிலேயே அரசாங்கத்திற்கு அக்கரை இருக்குமானால், மதுபான பர்மிட் வழங்குவதால் ஏற்படும் நன்மை தீமைகளை நன்கு சீர்தூக்கிப் பார்த்து, நல்லதொரு முடிவுகாணவேண்டுமென்பதற்காகவே இதனை எழுதுகிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கிடைக்காமல், கிராமத்தான் முருகனுக்கு எப்படி வேலை கிடைக்கும்? பேட்டி வைக்காமலேயேகூட அந்த வேலையை அவனுக்குக் கொடுத்திருக்கலாம். ஆனால், அதை மூடி மறைப்பதற்கு அதுதானே வழி? சம்பிரதாயம் என்று ஒன்று தொடர்ந்து நடைபெறவேண்டுமல்லவா? கண்துடைப்பிற்காகத்தான் அந்தப் பேட்டியே நடந்தது. ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பெயரால், தென்னகத்தின் கண்களை வடநாடு துடைக்கவில்லையா, அது போல!

பாவம், முருகன் உள்ளம் சோர்ந்தான்; உடல் தளர்ந்தான்! அவனை இப்பொழுது பார்க்கவே பயங்கரமாக இருந்தது. அவ்வளவிற்கு அவனுடைய உடல்நிலையிருந்தது! அவன் படுத்துவிட்டால், பிறகு அவனை நம்பியிருக்கும் குடும்பம் என்னவது? நானும், எனக்குத் தெரிந்த நண்பர்களும் அவனுக்கு அவ்வப்பொழுது சிறிது பண உதவி செய்துவந்தோம்!

காலம், அவனைப் படுக்கையில் கிடத்திவிட்டது. இவனைப்போல், வேலை தேடித்திரியும் வாலிபர்கள் எத்தனையோ பேர்! இதையெல்லாம், அரசாங்கம் புள்ளிவிபரத்தோடுதான் தெரிவிக்கிறது. ஆயினும், அவைகளை அடித்து ஒழிக்க இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட செயல்தான் என்ன?

தொழிற்படிப்பு இல்லாதவர்கள் என்று ஒதுக்கிவிடுவதுதான் முறையா? தொழிலைக் கற்றுக்கொண்ட பிறகு, அவனால் அத்தொழிலைத் தொடர்ந்து நடத்தவா முடியாது? அமெரிக்காவிலே வேலையிருக்கிறது, ஆனால், செய்ய ஆட்களில்லை! இங்கோ, ஆட்களிருக்கிறார்கள்; ஆனால், செய்ய வேலையில்லை! ஏன் வேலை இல்லை? நம்நாடு வடவர் கையிலே இருப்பதால்தான்! நம்நாடு நமதாக இருப்பின், நாம் நினைக்கும்—நமக்குத் தேவையான — தொழிற்சாலைகளையும், பண்ணைகளையும், அணைகளையும் — நம்மால் நிறுவ முடியுமே! இதனால், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியுமே! வடவரின் காலடியில் கிடக்கும் வரையில் நம் போன்ற ஏழைகளுக்கு வேலையே கிடைக்காதுதான்.

முருகனின் நிலை, என்னை எங்கோ இழுத்துச்சென்றது. இத்தகைய அலுவலகங்களின் அலங்கோலத்தையும், அத்தகைய அலுவலகங்களை நடாத்தும் ஆட்சியினரின் முறையையற்ற செயலையும் எண்ண எண்ண நாட்டு மக்களின் மனமே தூள் தூளாகிவிடுகின்றது!

அதோ...! என்ன அது, அழு குரல்!

முருகனுக்கு உண்மையிலேயே வேலைக்காக வந்த 'ஆர்டர்' கடிதத்தை எடுத்துக்கொண்டு எங்கள் ஊருக்குப்போயிருந்தேன். அப்போதுதான், அந்த அழுகுரல் கேட்டது! 'அன்பரசி, அன்பரசி!' என்று என் தங்கையை அழைத்து, 'என்ன அங்கே, ஏன் அழுகிறாள்?'' என்று கேட்டேன்.

அவள் சொன்னாள், "உங்க நண்பர் முருகன் இறந்துட்டாரு, அண்ணா!''

ஆ...! முருகன் இறந்துவிட்டானா? ஐயோ, முருகா! நீ இறந்துவிட்டாயா? பொல்லாத இந்த உலகத்தை வெறுத்து நீ ஓடியேவிட்டாயா? முருகா! இல்லை நீ ஓடவில்லை! உன்னை இந்த உலகத்தைவிட்டே ஓடச்செய்துவிட்டார்கள். நீ இருக்கும்வரையில்—நீ உயிரோடு இருந்த வரையில் உனக்கு ஒருவித உதவியும் செய்யாத இந்த அக்கிரமக்காரர்கள், இதோ, நீ இறந்தபின் உனக்கு வேலைதர முன்வந்துள்ளனர். ஆமாம் முருகா! "உனக்கு வேலை கிடைத்துவிட்டது!''

"அண்ணா, அண்ணா! அவரு இறக்கறதுக்கு முன்னே ஒரு கடிதம் எழுதிவைத்துவிட்டுச் செத்துப்புட்டாராம்!''

"எனக்கு இந்த நாட்டிலே வேலையே கிடைக்கவில்லை. எவ்வளவோ அலைந்தேன்; எங்கெல்லாமோ தேடினேன். ஆனால், எனக்கு வெற்றியே கிடைக்கவில்லை! என்னைப்போன்ற வாலிபர்கள் எத்தனையோ கோடிபேர் இதுபோல் வேலை கிடைக்காமல் அல்லலுறுகின்றனர் என்பதை அறிந்தேன். ஐயோ! திராவிடமே! பொன்னும், பொருளும் படைத்திட்ட உன் செல்வமகனாகிய நான் இதோ போகின்றேன். எனக்கு வேலை கிடைக்குமிடம்தேடிப்போகின்றேன். என் குடும்பத்தை நீதான் காப்பாற்ற வேண்டும்'' என்று எழுதிவைத்தாராம், அண்ணா!

"ஐயோ, முருகா! வேலைகிடைக்குமிடம் தேடியா நீ போகிறாய்? இதோ, உனக்கு வேலை வந்துவிட்டதே! வந்தும் என்னபயன்? வேலைகிடைப்பது எவ்வளவு அருமையாக உள்ளது பார்த்தாயா? என்ன கொடுமை இது?''

'நம் நாட்டிலே வறுமையே தலைகாட்டக்கூடாது. அதற்காக நாம் விடுதலை பெற்றாகவேண்டும்' என்று நாம் கூறினால், நம்மைக் கேலியும், கிண்டலும் செய்யத்தான் தெரிகிறதேயொழிய, இத்தகைய சாவுக்கும்பல்கள் அழிவுகள் அந்த அதிகாரப் போதையால் ஆட்சி நடத்துபவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது! வேலைகிடைக்காததால் மனமுடைந்து நஞ்சு சாப்பிட்டு உயிர் துறப்போர் எத்தனையோ! தூக்குக் கயிறை முத்தமிட்டு மீளாத தூக்கத்தைமேற்கொள்வோரும் எண்ணிலடங்கார்! இரயிலடியின்கீழ், கிணற்றுக்குள்...இப்படி எங்கெல்லாமோ, இந்த வேலைதேடுபவர்களின் பிணங்கள் எத்தனை எத்தனையோ!

அதோ, இங்கே, வேலைகிடைக்காததால் உண்ண உணவு இன்றி, உடுக்க உடையின்றி அந்தத் திராவிடத் திருமகன் பாடையிலே பிணமாகச் செல்கின்றான்! ஆனால், அதோ அந்தத் தலைநகரத்திலே யார் யாரோவாம், எவர் எவரோவாம், விமானத்திலிருந்து இறங்கும் 'பெரிய' மனிதர்களைத் திறந்த கார்களில் உட்காரவைத்து 'நகர்வலம்' வந்து, ஆடல் பாடல்களைக் காட்டிப் பெரம்பூரையும் நினைவுபடுத்த மறக்கவில்லை!

அந்தோ திருவிடமே! இதுவா உன்நிலை? ○

## ஏனோ மறந்தார்!

"மத்திய சர்க்காரிடம் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ள நமது முதலமைச்சர் காமராஜினாலேயே போதிய அளவு நிதி உதவி பெற முடியவில்லை என்றால், இனிப், பதவி ஏற்கப்போகும் தி. மு. க. போன்ற கட்சிகளால் எவ்வாறு அதிகப்படியாகப் பெற இயலும்.''

என்று அண்மையில் அமைச்சர் வெங்கடராமன் அவர்கள் காஞ்சியில்நடைபெற்ற காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் கேட்டிருக்கிறார்.

ஆனால், அமைச்சர் ஒன்றை மறந்துவிட்டார். தி. மு. க. போன்ற எதிர்க்கட்சிகள் அதிகாரத்திற்கு வந்துவிட்டால், தங்களுக்குத் தேவையான நிதி உதவியை மத்திய அரசிடம் ஏன் கேட்கப்போகிறார்கள்? இங்குகிடைக்கும் நிதி மத்திய சர்க்காருக்குப் போகாமல் பார்த்துக்கொண்டால் போதுமே! இதை ஏனோ அமைச்சர் மறந்தார்?

# அன்பின் பிணைப்பு-நாம் கண்ட இயக்கம்

**சி. என். ஏ.**

“பிரம்மச்சாரி என்றால் என்ன என்று யாராவது சொல்ல முடியுமா''—இதுபோன்ற கேள்வி ஒன்றைத் தனது வகுப்பறையிலே ஆசிரியை ஒருவர் எழுப்பினார்.

“மிஸ்'' என்று விடை கிடைத்தது. பெற்றதோர் நல் வாய்ப்பினைத் தழுவிக்கொள்ளத் தவறியவர்கள்தான் அவர்கள்.''

காமராசரைப் பற்றி விசாரிக்கும் அளவிற்குத் தூண்டியிருப்பது கண்டு ஒருகணம் திகைப்பில் ஆழ்ந்து போனேன். அதுபோதுதான் எங்கோ, எப்போதோ நான் படித்த மேற்சொன்ன வேடிக்கை மிகுந்த வாசகங்கள் என்னுடைய நினைவு அலையில் வந்து மோதின.

சென்னை மாநிலத்தின் இல்லை—தமிழகத்தின் முதல்வர் ஒரு பிரம்மச்சாரி—ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலைகளை ஆரத்தழுவிக்கொள்ள அவர் ஒருபோதும் தவறியதில்லை. நான் குறிப்பிடுவது அரசியல் துறையைப்பற்றி! வேறு தவறாக எண்ணவேண்டாம். இந்தக் கலையில் கடந்த காலத் தலைவர் என்பதாலேயே, அதிகாரபீடத்திலே இத்துணை ஆண்டுகளாகவே அவர் அமர்ந்திருக்கிறார். சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவரோ சர்வ வல்லமை பொருந்திய வழக்கறிஞர், அரசியல் ஞானம் மிக்க சி. ஆரின் தயாரிப்பிலே வந்தவர். இருப்பினும், அப்படிப்பட்டவர், ஒருவருக்குத் தலை வணங்கத்தான் வேண்டியிருக்கிறது. அதுவும் கல்லூரியின் நுழைவாயிலைக்கூட எட்டிப் பார்க்காத ஒருவருக்கு. உள்நாட்டமைச்சரோ பிரச்சினைகளில் தெளிவுள்ளவர் என்பதில் பெயர் பெற்றவர். கொள்கையிலே உறுதிகொண்டவர். தமிழகத்து அரசியல் வானிலே நீண்ட பல ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்திவந்த முத்துரங்கனாரிடத்திலே பயிற்சி பெற்றவர். எனினும், கனம் பக்தவத்சலம் அவரது தலைவரின் கட்டளைக்குக் காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்டதோர் நிலை எப்படி வந்துற்றது? இந்த அந்தஸ்தினைக் கனம் காமராசர் எப்படி அடைந்தார்? காங்கிரஸ் கட்சியை நிர்மாணிப்பதில் அவருடைய பங்கு என்ன? அவருடைய பிடிப்பு எப்படி உறுதிப்பட்டுவிட்டது? எப்படி மற்றவர்களுக்கு இது கண்டு அரிப்பு ஏற்படாமல் இருக்கிறது? என்பன போன்ற கேள்விகளை அடுக்கடுக்காக எழுப்பினால், “கல்லூரியிலே படித்தவர்களையும், பல்கலைக் கழகத்திலே பட்டம் பெற்றவர்களையும் ஆட்டிப்படைக்கும் மிகச் சாதாரணமான இந்த அற்புத மனிதரைப்பற்றி அந்தக் கேள்விகள் கதைகள் பல பக்கம் பக்கமாகச் சொல்லும்''—இப்படிச் சொல்வது, அதிகாரபீடத்திலே அமர்ந்துள்ள ஒருவரை அளவுக்குமீறிப் புகழ்ந்து, ரொட்டித்துண்டுக்குக் காத்துக்கிடப்பதற்காகவேதான். இதற்குரிய காரணம் காமராசரிடத்திலோ, காமராசரைச் சுற்றியோ காணமுடியாது. ஆனால், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் இன்றைய நிலை அது. பார்வைக்கு ஆபாசமானதாகத் தோன்றலாம். ஆனால், உண்மை நிலை இதுதான். கல்வியின் சுவை அறியாதவர். எனவே கடந்தகால நிகழ்ச்சிகள், தத்துவங்கள் இன்னும் இது போன்ற எதைப்பற்றியும் அவர் கவலை கொள்வதில்லை. உள்நாட்டுப் பொது அறிவைத் தவிர, நாடுவதற்கு அவருக்கு வேறொன்றும் இல்லை. அவசியமான கல்வித் தேவைகள் இல்லாத காரணத்தால் தனக்கு அப்பாற்பட்ட ஒரு உலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் குறித்து அவர் கவலை கொள்வது கிடையாது. காங்கோ நாட்டுத் தலைவர்கள் லுமும்பாவும் — கசாவுபும் அவருக்கு ஒன்றாகவே தோன்றும். அந்தச் செய்திகளுக்கு அவர் முதலிடம் அளிப்பதும் இல்லை. தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் கிடையாது. உண்மையைக் கூறுவதானால், அவர் தனது குறைபாடுகளையும் தோல்விகளையும் மட்டும் நன்கு உணர்ந்திருக்கிறார். இவைகள் பெரியதோர் பிரச்சினையாகவே இருக்கிறது. அவைகள் குறித்து நமக்கேதும் நிர்ப்பந்தம் கிடையாது. “பெரிய மனிதர்கள்'' என்று சொல்லப்படுபவர்கள் கவனித்துக்கொள்ளவேண்டிய பிரச்சினைகளாகும். எனவே, நாம் அதுபற்றிக் கவலைகொள்ளத் தேவையில்லை, என்ற முறையிலேயே அவர் சென்றுகொண்டிருக்கிறார். அவரைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சியில் புதிதாக நுழைந்தவர்கள்—அவர்களுடைய சேமிப்பு நிதி, இதுபற்றிய வரலாறு தெரிந்துகொண்டாலே போதும். அவருடைய அரசியல், சேமிப்பு நிதியின் கணக்குப் புத்தகத்தின்மீது கட்டப்படவேண்டியதொன்றே ஒழிய, வரலாறு, நிலநூல்—இன்னும் இது போன்ற பெரியதோர் புத்தகத் தொகுப்புகளின் மீது கட்டப்படவேண்டியதல்ல.

காமராசர் தனக்கென எவ்விதக் கொள்கையையும் வகுத்துக்கொண்டவர் அல்ல. எனவேதான் அரசியலிலேயும் உண்மையான பிரம்மச்சாரியாகவே அவர் இருக்கிறார். இதனால் அவர் இரண்டுவித நன்மையைப் பெறுகிறார். தனது, என்று எதையும் அவர் உரிமை கொண்

# புதிய காங்கிரசார், அவரது சேமிப்பு நிதி

டாடுவதற்கில்லை. மேலும் தனது வழியில் வரும் எதையும் அவர் எடுத்துக்கொள்ளவும் உரிமைபடைத்தவராகவே இருக்கிறார். இன்றைய நிலையைவிட, அவர் அதிகப்படியாக இருந்திருப்பாரேயானால், இரு மடங்கு ஒரு சில கொள்கை கோட்பாடுகளுடன் அவர் இருந்திருப்பார். தனக்கென ஒரு கொள்கையும் இல்லாத காரணத்தினால், கிடைக்கின்ற அழகுப்பொருள்கள் அத்தனையும் ஏற்றுக்கொள்ளவேண்டியவராயிருக்கிறார். அதற்காக அவர் வருந்துவதோ, கவலைப்படுவதோகூட இல்லை.

தற்போது காமராசர் செல்லும் இடங்களில் எல்லாம் நில உச்சவரம்பு குறித்தும், கூட்டுறவு குறித்தும் இன்னும் இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அழுத்தம் திருத்தமாகப் பேசிவருகிறார். அதற்குக் காரணம், "அதுதான் கட்சியினுடைய கொள்கையாக இருக்கவேண்டும்'' என்று அவரது தலைவர் கற்றுத்தந்த பாடம்தான் அது. எனவேதான், போகுமிடமெல்லாம் அந்தக் கொள்கைகளை உடன் எடுத்துச்செல்கிறார். "உழுபவனுக்கே நிலம்'' என்ற கொள்கையை ஆண்டுகள் பலவற்றிற்கு முன்பு அவர் கேலிபேசியவர்.

பொருளாதார நிபுணர்களாலும், அரசியல் வல்லுனர்களாலும் அவர் தயாரிக்கப்பட்டிருந்தால் நில உச்சவரம்பு, கூட்டுறவு இவைகள் குறித்து ஆதரவாகவோ

சொன்னால்—குடியிருப்பவனுக்கு வீடு சொந்தம்; பயணம் செய்யும் பிரயாணிகளுக்கு இரயில் சொந்தம்; சாலைகள், நடப்பவர்களுக்குச் சொந்தம்; என்று கனம் காமராசர் போகுமிடமெல்லாம் பறைசாற்றி வந்தார். பொதுமக்கள், குறிப்பாக விவரமறிந்தவர்கள் இந்தப் பிரச்சினையை அணுகும் அறியாமை நிலைகண்டு எண்ணிக்கூடப் பார்க்கமுடியாத நிலையிலேயே இருந்தார்கள். ஆனால், பெருந்தலைவர் ஒருவரே இதுகுறித்து வெட்கப்படாதபோது, மற்றவர்களும் மௌனிகளாகவே இருக்கவேண்டியிருந்தது. எனவே, புள்ளிவிவரம், ஆதாரப் படங்கள், எண்ணிக்கை ஆகிய, எதுவும் காட்டவேண்டிய தேவை காமராசருக்கு ஏற்படவில்லை. அதற்கான நிபுணர்கள் பலரை விலைகொடுத்து வாங்கித் தனது அணியிலே அவர் வைத்துக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட பிரச்சினைகள் குறித்துப் பேசுவதானால் அவர்களை அனுப்பிவைக்கிறார். ஒருவனுடைய உள்ளத்தையும் — மூளையையும் வருத்தக்கூடியதாக இல்லாத ஒருவேலையைக்கொண்டு அவர் மிகவும் மனநிறைவுகொள்கிறார். அவருடைய மனம் நிதானமானதாகவும், பாரம் நிறைந்ததாகவுமே காணப்படுகின்றது. அவ்வப்போது எளிதில் கண்டுகொள்ளக்கூடிய அவரது வெறிச்சோடிப்போன பார்வை, தெளிவில்லாத மனதுடன் இருக்கிறார் என்பதையே தெள்ளத் தெளியக்

# கொள்கை பற்றிக் கவலைப்படாதவர்

எதிராகவோ தனது வழக்கினை மெத்தச் சிரமப்பட்டு நிலைநாட்டியிருப்பார். பல்வேறுபட்ட பேராசிரியர்கள் பல்வேறுவிதமான கருத்துக்களை முன்வைத்திருப்பார்கள். நிச்சயமாக ஒரு சங்கடமான சூழ்நிலை உருவாகியிருக்கும்.

ஆனால், காமராசருக்கு அப்படிப்பட்ட தொல்லைகள் ஏதும் இல்லை. உட்கார்ந்து கற்றுத்தெளிவதற்கும் பரிதாபத்திற்கு உரிய அவருக்கு, அதற்கேற்ற நேரம் கிடையாது. அதற்குக் காரணம், அவர் எப்போதும் பம்பரம்போல் சுழன்றுகொண்டேயிருக்கிறார்—இல்லை, எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கிறார். இவையத்தனையும் உணர்ந்தவராகவே அவர் இருக்கிறார். பிரச்சினைகளை மக்கள் மத்தியிலே வைக்கவேண்டும், அதற்கான ஆதாரங்களைத் தேடிப்பிடித்துக்கொண்டுவந்து சொல்லவேண்டும் என்ற உண்மையைக்கூட அந்த நல்லவர் அறிந்துகொள்ள இயலாத நிலையிலேயே இருக்கிறார். அதற்கான வழிமுறைகள் அறிந்தவரும் அல்ல. இத்துறையில் இயலாமை ஒன்றுதான் அவர் பெற்ற கிடைத்தற்கரிய மகிழ்ச்சிக்குரிய வரப்பிரசாதம்.

இதை நான் கூறும்போது நில உச்சவரம்பு, உழைப்பவனுக்கு நிலம் ஆகியவை குறித்துக், காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வமான கொள்கை ஆதரவளிக்காத நிலையில், உழுபவனுக்கு நிலம் என்று

காட்டுகிறது. அது அவருக்குப் பலவீனத்தைத் தருவதோடு அன்றி, அதே நேரத்தில் பலத்தையும் அவருக்கு அளிக்கிறது. சொந்தக் கருத்துக்களை அவர் எப்போதும் ஏற்றுக்கொள்வதில்லை. அவரது தகுதிகள் பற்றி ஏனையோர் அளவெடுக்கும்போது தனக்குள்ளாகவே அரைகுறையாகச் சிரித்துக்கொள்வார். அமைதியே அவருடைய தகுதி. அதுவே அவருடைய வெற்றியின் இரகசியம் என்று பலர் சொல்லுவதைக் கேட்டு கனம் காமராசர் அதன்மூலம் ஏற்படக்கூடிய சூழ்நிலையைத் தக்கமுறையில் பயன்படுத்திக்கொள்கிறார்.

காமராசரைப்பற்றிச் சொல்வதானால் — அவர் சந்தர்ப்பச் சூழ்நிலைகளை ஒருபோதும் உருவாக்கியதில்லை. ஆனால், உருவாகும் சூழ்நிலைகளை மட்டும் பயன்படுத்திக்கொள்ளத் தவறுதவர்.

விளக்கமாகவே சொல்லவேண்டுமானால், ஆற்றங் கரையினிலே, "ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு!'' என்று சொல்லப்படுவது போலவே காமராசரும் வழிமேல் விழி வைத்துக்கொண்டு சந்தர்ப்பச் சூழ்நிலைகளை எதிர்பார்த்த வண்ணமாகவே இருக்கிறார். தன்னுடைய குறைபாடுகளை நன்கு உணர்ந்த அவர் அமைதியாக இருத்தலே சிறந்ததோர் கொள்கை என்ற எண்ணத்திலே இருந்து வருகிறார். அவருடைய அமைதியைக் கண்ட மக்கள்

# உச்ச வரம்பு-முன்பு கேலி பேசியவர்

எதையும் யூகித்த வண்ணமே இருக்கின்றனர். இந்த நிலை அமைதியோடிருப்பவருக்கு அவர்களது நிழலிலே ஒண்டிக்கொண்டு கீழே விழும் பழங்களைப் பறித்துக் கொண்டு போவதற்கு வசதியாக இருக்கிறது. அவரது கருத்துக்களை அவ்வளவு எளிதில் அவர் வெளியிடமாட்டார். அவ்வளவு ஆழமான நெஞ்சம் உடையவர்—அவரைப்பற்றி அவரது எதிரிகள் சொல்வது இதுதான். இந்த உண்மை நிறைந்த சூழ்நிலை காமராசருக்கு மிக நல்ல முறையில் பயன்பட்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. எனவே தான், மௌனம் அவருக்கு இன்றியமையாத தேவைகளில் ஒன்ருகவே இருக்கிறது. சுயபுத்தி படைத்த, எதையும் தானே எண்ணிச் செய்கின்ற கருத்தாழம் நிறைந்த, ஒரு கொள்கை வழி நின்று செய்யும் செயல் என்றெல்லாம் பலர் பலவிதமாக அவரது அமைதிக்கு தத்துவங்கள் பல வடித்தெடுத்துப் பறைசாற்றி வந்தனர். இந்தத் தவருன எண்ணத்திற்கு ஊறு நேரா வண்ணம் அதனுடைய போக்கிலேயே, அந்த எண்ணம் மேலும் வளரும் வகையிலேயே பெருமூச்சு ஒன்றை விட்டுவிட்டு அந்த அமைதியையும், மௌனத்தையும் மகத்தானதோர் ஆயுதமாகக் காமராசர் கடைபிடித்து வந்தார்.

அப்படிப்பட்ட காமராசர் தான் இன்றையத் தினம், **புணர்ச்சியை** உருவாக்கியது என்பதை எவரும் மறுக்கமுடியாது. பத்திரிகைத் துறையிலே பார்ப்பனர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்ததால்–பார்ப்புனர்—பார்ப்பனர் அல்லாதார் என்ற வேற்றுமை அளவுக்கு மீறிய வகையிலும், உண்மைக்கு மாறுபட்ட நிலையிலும் மிகைப்படுத்தப்பட்டது.

காங்கிரஸ் தலைவர்கள் தங்களுக்குத்தான் அறிவாற்றல் இருக்கிறது என்று உரிமை பாராட்டுவதை யாரும் மறுக்கமுடியாது. அப்படிப்பட்டவர்கள் வகுப்புவாதத்தை எதிர்த்துத் தேசீயத்தைக் காப்பாற்றுவதில் முனைந்து ஈடுபட்டனர். காமராசர் மட்டும் இந்தப் போராட்டம் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளாகவே தொடர்ந்து நீடிக்கவே விரும்பினர். பார்ப்பனர்களுடைய பிடிப்புச் சீர்குலைந்து தகர்த்தெறியப்பட்டால், தன்னுடைய உதவியைக் கோருவார்கள் என்று காமராசர் கருதிக்கொண்டிருந்தார். இருவேறு சக்திகள்—கோஷ்டிகள் போராடிக்கொண்டிருந்தால் இரண்டில் ஒரு கோஷ்டியினர்—ஒரு நடுநிலையாளரின் உதவியை நாடுவது இயற்கை என்பதை அறிய அதிகமான தெளிவு தேவையில்லை. ஆனுல், காமராசர் ஒரு நடுநிலையாளர் என்று கருதுவதற்கில்லையென்ருலும், அப்படிப்பட்டதோர் அவசியம் ஏற்பட்டுவிட்டது. இரண்டு

# தெளிவில்லாத உள்ளம், வெறிச்சோடிப்போன பார்வை

மிக மிகச் சாதாரண விஷயங்களைக்கூட நீண்ட நேரம் பேசுவதற்கு முற்பட்டுவிட்டார். அதற்குக் காரணம், அமைதியாக இருப்பவர் — இருந்தவர் எப்போதாவது பேச ஆரம்பித்துவிட்டால் அவரைச் சுற்றி மக்கள் ஆயிரக்கணக்கில்கூட ஆரம்பித்துவிடுகின்றனர். எப்போதும் வழக்கமாக அமைதியைக் கடைப்பிடிக்கும் காமராசர் திருவாய் மலர்ந்தருளிப் பேசுகிருர் என்ருல், ஏதோ முக்கிய செய்தி இருக்கும்; எனவேதான் காமராசர் பேச வந்திருக்கிருர் என்று அவரது ஆதரவாளர்கள் வாதாடுகின்றனர். கனம் காமராசரோ தான் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் இந்தச் சூழ்நிலையையும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்கிருர்.

சூழ்நிலைகளை உருவாக்குவது என்ற கலையில் காமராசர் வல்லவர் அல்ல என்ற பேருண்மை—அவரைப் புகழ்ந்துரைக்கும் வகையில், எவ்வித மசோதாவோ, சட்டமோ இதுவரையில் அவர் கொண்டுவந்தது இல்லை என்பதிலிருந்தே அவரது வல்லமை நன்கு புலனுகிறது.

நீதிக்கட்சி, தன்மான இயக்கம் — ஆகிய இரு அமைப்புகளின் தலைவர்கள் அறிவு ஆற்றல் நிரம்பிய, ஏனையோரின் வாதங்களைச் சுக்கு நூருக்கக்கூடிய அவர்களது சொற்பொழிவுகள் **"பார்ப்பன எதிர்ப்**

இனங்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களுக்குரிய பிரச்னையைப் புரிந்துகொள்ளவேண்டுமானுல், தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளாக நீடித்து வந்த இலக்கிய, சரித்திர வரலாற்று உண்மைகளை ஒருவர் நன்கு கற்றுத் தெளிந்திருக்கவேண்டும். இத்துறையில் காமராசரை எதிர்பார்ப்பது—முடியாத ஒன்றை எதிர்பார்ப்பது போலவே முடியும். எனவேதான், அவரது பலவீனமே அவருக்கு வலிவையும் தேடித்தந்தது. கோஷ்டிகளில் சேரவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எழுந்தது இல்லை. எனவேதான், அவர் விரும்பியவாறே நடுநிலையாளர் என்ற நீதிக்குப் புறம்பான நிலையானதோர் இடத்தை அவரால் பெற முடிந்தது. விதைக்காது அறுவடை செய்யும் வாய்ப்பு நடுநிலையாளர்களுக்கு எப்போதும் உண்டு. குறிப்பிடத்தக்க இந்தச் சாதகமான சூழ்நிலை காமராசருக்கு ஏற்பட்டது. இரண்டு கோஷ்டியினரும் அவரது உதவியை நாடினர்கள். இதற்கு அவரது வழக்கமான கோழைத்தனம் பெரிதும் உதவிற்று. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும் என்று உதயசூரியனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த காமராசரை–இரண்டு கோஷ்டியினரும், அவர்தான் விட்டுவைக்கப்பட்டிருக்கும் எஞ்சிய சக்தி என்று கருதினர்.

காமராசர் வழக்கமாகவே மௌனம் சாதிப்பவர். ஆனுல், நிலையான குறிக்கோள் ஏதும் இல்லாத சில புல

# சந்தர்ப்பத்தை உருவாக்காதவர்–உருவானதை விடாதவர்

பிரச்சினைகளில் மட்டும் எதிர்பாராத சிற்சில சமயங்களில் கருத்தறிவிக்க முற்பட்டு விடுவார். ஒரு ஆலோசகராகவும், நீதிபதியாகவும் அவர் தன்னைத்தானே கருதிக்கொண்டிருந்தார். உண்மையைச் சொல்ல வேண்டுமானல் அந்த நிலையில் அவர் மகிழ்ச்சியாகவே காலங்கடத்தி வந்தார்.

ஆனல், ஆச்சாரியாருடன் நேருக்கு நேர் போராட வேண்டிநேரிட்ட சமயத்தில்,போராட்ட உணர்ச்சியுடன், மாபெரும் சக்தியொன்று இருப்பதைக் கண்டறிந்தார். உடனே அந்தச் சக்தியைத் தனக்குச் சாதகமாக எந்த நேரத்திலும் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலையில் அவர் இருந்தார். அந்தச் சக்தியினர் கனம் காமராசரை உரிமைகள் மறுக்கப்பட்ட பார்ப்பனரல்லாதார் சமுகத்தின் சின்னமாகவே கருதினர்.

இதற்கிடையில், ஆச்சாரியாரின் புகழ்மிக்க அவரது அறிவுத் தெளிவு, இயற்கையாகவே பல விரோதிகளை உண்டாக்கிவிட்டது. அவர்களில் பாதிக்கப்பட்டவர்கள், இழிவுக்குள்ளானவர்கள், கைவிடப்பட்டவர்கள், சிதறிப் போனவர்கள், இலாப நட்டக் கணக்குப் பார்ப்பவர்கள், இன்னும் இவைபோன்ற பலரும் கனம் காமராசர் பக்கம் வந்து சேர்ந்தனர். ஆச்சாரியாரை விரட்டுவதற்குக் காமராசரை ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்று அவர்கள்

யும், அன்பையும் பெற்றவர் அவர். அவரது தன்னலமற்ற உழைப்பும், நிர்வாகத் திறமையும் மக்கள் அனைவராலும் புகழ்ந்துரைக்கப்பட்டது. ஆனல், காமராசர் தங்கள் இருவருக்கிடையே ஏற்பட்டுவிட்ட இந்த இடைவெளியை அறிந்து, தன்னுடைய உறவைத் துண்டித்துக்கொண்டு, அவரது அதிருப்தியாளர்களின் உதவியைக் கொண்டு, காமராசர், ஓமந்தூராரை ஆட்சிப் பொறுப்பிலிருந்து விரட்டியடித்தார் என்பது நாடறிந்த உண்மை. நானிலம் இதனை நன்கறியும். இதற்குச் சான்றுகள் பல உண்டு. சூழ்நிலைகளும் ஏராளம். இத்துறையிலும் அவர் கையாண்டமுறை வேறுபட்டதல்ல. சந்தர்ப்பச் சூழ்நிலைகள் அனைத்தும் காமராசருக்குச் சாதகமாகவே உருவானவை. ஆனல், அதே காமராசர் பார்ப்பனரல்லாதாரின் பாதுகாப்புச் சின்னமாகத் திகழ்கிருர். காமராசர் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்காதவர் என்பதையும், உருவாக்கப்பட்ட சூழ்நிலைகளை அவர் எப்படிச் சாதகமாக்கிக்கொண்டார் என்பதையும் இப்போது நன்ருக உணர்ந்துகொண்டிருப்பீர்கள் என்றே கருதுகிறேன்.

இந்த வகையில்தான் காமராசர் பார்ப்பனரல்லாதாரின் பாதுகாவலர் என்று, பெரியார் இன்றையதினம் முனைந்து நின்று அவருக்கு வலிந்து சென்று ஆதர

# பார்ப்பன எதிர்ப்பு—நீடிக்கவே விரும்பியவர்

அனைவரும் கருதினர். காமராசரும் அவர்களுடைய விருப்பத்திற்குத் தடையாக இல்லை என்ருலும், அவ்வப்போது மறுப்பு அறிக்கைகள் விடுவதில் மட்டும் அவர் ஒரு சிறிதும் தவறவில்லை.

இறுதியில் ஆச்சாரியார் பதவியிலிருந்து விரட்டப்பட்டதும், பார்ப்பனரல்லாதாரின் இலட்சிய சின்னமாகக் கனம் காமராசர் விளங்கினர். எப்படியோ ஏற்பட்ட இந்த அரியதோர் சந்தர்ப்பத்தை ஆரத் தழுவிக் கொள்ளக் காமராசர் தவறவில்லை. உண்மையைக் கூறுவதானல், இந்தஉணர்ச்சி கொழுந்துவிட்டெரியவே செய்தார்.

இதற்கிடையில், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் தலைமைப்பீடத்திற்கு உரிமை கொண்டாடக்கூடிய அனைவரும் ஒருவர்பின் ஒருவராகத் தாங்களாகவே பின்வாங்கிக்கொண்டனர். மற்றும் சிலர் சம அந்தஸ்தினைப் பெற்றனர். பிரிட்டன் நாட்டிலே தளபதி ஒருவன் தன்னுடைய திறமையினுலும், உழைப்பின் மூலமும் அப்படிப்பட்டதோர் நிலையினை அடைந்ததாக நாம் அறிகிருேம். அதேபோன்று காமராசரின் தலைமைப்பீடத்திற்குப் போட்டியிடக்கூடிய அனைவரும் ஒவ்வொருவராக நிராயுதபாணிகளாக ஆக்கப்பட்டுவிட்டனர்.

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரைப்பற்றி அறிந்திருப்பீர்கள். மக்கள் அனைவரின் அபிமானத்தை

வளிக்கிருர். ஏற்பட்ட சூழ்நிலைகளின் திருப்புமுனைகளைக் கண்டு காமராசர் உள்ளூர மனநிறைவு கொண்டாலும், வருத்தத்தோடுதான் காணப்படுகிருர். காமராசரின் ஆதரவாளர் என்று பெரியார் தன்னைத்தானே வெளிப்படையாகவேவிளம்பரப்படுத்திக்கொண்டாலும், உண்மையில் அவர் எதற்கோ, யாருக்கோ விரோதமாகக் காரியங்களைச் செய்துவருகிருர் என்பதைக் காமராசர் அறியாதவரல்ல.

இந்தக் காற்றுவேகத்தைக் காமராசர் அளவுக்கு மீறி நம்பிக்கொண்டிருக்கிருர். சந்தர்ப்பங்கள் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கும்—ஆனல் எப்போதும் அப்படி இருக்காது என்பதை நாம்தான் பொதுமக்களுக்கு உணர்த்தியாகவேண்டும்.

காமராசர் நல்லவர் ஆகவே, அவர் நம்மவர்—இது தான் சில சுயநலக்காரர்களின் இன்றையப் பிரச்சாரம். அவர்நல்லவர்–அவர் மிகவும் நல்லவர், நானும் சொல்ல முடியும்! அண்மைக்கால அவரது நடவடிக்கைகள் முற்றிலும் இயற்கைக்கு மாறுபட்ட நிலையில் திரைப்பட நிகழ்ச்சிகளாகவே காணப்படுகிறது. நாளுக்குநாள் மற்றவர்களின் கவுரவத்தைக் குலைக்கும் அளவுக்கு அவர் வெளியிடும் கருத்துக்கள் மேலும் மேலும் அருவருக்கத் தக்கதாகவே இருக்கின்றன. அவர் ஒன்றை மட்டும்

# கோஷ்டிகளை சாதகமாக்கிக் கொள்பவர்

பெரிதும் நம்பிக்கொண்டிருக்கிறார். அதாவது, பார்ப்பன எதிர்ப்புணர்ச்சியைப் பெரியார் கிளப்பிக்கொண்டே இருப்பார்—எரிகிற அந்தப் பெரு நெருப்பில் காங்கிரஸ் எதிர்ப்புச் சக்திகள் அனைத்தும் தி. மு. க. உட்பட எரிந்து கருகிவிடும் என்ற எண்ணத்திலே அவர் இருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மகத்தானதோர் பொறுப்பொன்று இருக்கிறதென்பதைக் காமராசர் அறவே மறந்துவிட்டார். அந்த மகத்தான பொறுப்பு, கட்சி இயந்திரத்தால் கவரக்கூடியதல்ல. அன்பின் அடிப்படையிலே பிறந்த ஒன்றாகும். பெரியாரின் தி. மு. க. எதிர்ப்பினைக் கண்டு கனம் காமராசர் திருப்தி அடையலாம். திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள்ளாக அசம்பாவித நிகழ்ச்சிகள், பிளவுகள் ஏதும் ஏற்படலாம் என்று கூட அவர் நம்பிக்கொண்டிருக்கலாம். ஆனால் வடநாட்டு ஆதிக்கம் குறித்து மக்கள் நினைக்கவும், அதுகுறித்துப் பேசவுமான நிலைமையை திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கிவிட்டுவிட்டது என்பதைக் காமராசர் உணரத் தவறிவிட்டார். தமிழகத்தின் மூலை முடுக்குகளிலேயெல்லாம் இந்தக் கருத்து இன்றைய தினம் வேரூன்றிவிட்டது. கேளாக்காதினராக இருந்தவர்கள் எல்லாம் இன்றையத்தினம் இந்தக் கருத்துக்கு ஆதரவு தருவதற்கு முனைந்துவிட்டார்கள். இந்தப் பிரச்சினை இன்றையதினம் மேடை முதற்கொண்டு பத்திரிகை உலகம் வரை கேட்கத்தொடங்கிவிட்டது. பலர் இன்றையதினம் இப்பிரச்சினை குறித்துப் பலன் தரத்தக்க வகையிலேயே பேச ஆரம்பித்துவிட்டனர்—மற்றவர்கள் இந்தக் கருத்தினை ஆதரிக்க முனைந்துவிட்டனர் — இன்றையதினம் இது குறித்துப் பேச்சுவார்த்தைகள் எங்கும்கேட்கப்படுகிறது. எல்லாத் திக்குகளிலும் முழக்கமிடப்படுகிறது என்பது மட்டும் உண்மை. நாம் பெற்ற இந்த மகத்தான செல்வத்தை யாரும், எவரும் எளிதில் அழித்துவிட முடியாது. இந்தக்கருத்துக்களை எதிர்க்கத்துவங்கும் காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கை ஒவ்வொன்றும் நம்முடைய தேசிய உணர்ச்சிக்குப் புதியதோர் வலிவை ஊட்டுகிறது. நமக்குஏற்படுகின்றதோல்விக்கும், எதிர்ப்புக்கும், ஏளனத்திற்கும் — தாக்குதல்களுக்கும் அவர்களது நடவடிக்கை ஒவ்வொன்றும் உரமூட்டுவதாய் அமைகின்ற நிலையிலேயே இருக்கிறது. நம்முடைய செல்வாக்கினைக் குலைப்பதற்கு கடுமுயற்சி எடுக்க வேண்டிய அளவிற்கு நாட்டிலே இன்றையதினம் மகத்தானதோர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. அதிருப்திகள் நிறைந்த வட்டாரத்தினர் இன்றையதினம் அமைச்சர்கள்மீது புன்சிரிப்பினைப் பொழிந்து தள்ளுகிறார்கள்.

இதற்கிடையில் அன்றாடம் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் வேடிக்கை நிறைந்த நிகழ்ச்சிகள் பல, மக்கள் எண்ணத்தைக் கொழுந்துவிட்டெரியச் செய்கின்றன. காட்டுமிராண்டிகள் என்ற நிலையிலே கருதப்பட்ட மக்கள் இன்றையதினம் தன்னாட்சி பெற்று—உரிமை பெற்ற மக்களாக வாழ்ந்து வருகிறார்கள். அவைகள் இன்றையத்தினம் நாம் மேற்கொண்டுள்ள இலட்சியத்தில் எவ்வளவு இடையூறுகள், இன்னல்கள் ஏற்பட்டாலும் உறுதியுடன் நின்றுபாடுபடவும், அதிலே வெற்றிபெறவும் நமக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிப்பதாகவே இருக்கிறது. நம்முடைய வெற்றிகளை அடைய மற்றவர்கள் உண்டாக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை நாம் ஒருபோதும் நாடிக்கொண்டிருக்கவும் இல்லை; நம்பிக்கொண்டிருக்கவும் இல்லை.

# உலக வரலாறு நமக்கு உரமூட்டுகிறது.

நம்முடைய பணியிலே நம்முடைய நம்பிக்கையிருக்கிறது. நம்முடைய நேர்மையான வழியில்தான் நம்முடைய நம்பிக்கை இருக்கிறது.

எனவே, காமராசர் நமக்கு ஓர் பிரச்சினை என்ற வடிவத்தைக் கொடுக்கத் தேவையில்லை, அது ஒரு நிகழ்ச்சி. அவ்வளவுதான். நம்மை எதிர்நோக்கியுள்ள ஒரு பிரச்சினையாக ஒருபோதும் ஆகாது.

மக்கள் இயக்கம் இன்று எவ்வளவு சக்திகளை வேண்டுமானாலும் அவிழ்த்துவிட முடியும். அந்தச் சக்தி சரியான முறையில் தயாரிக்கப்பட்டால் எதிர்க்க முடியாத ஒரு மகத்தான சக்தியாக மலரவும் முடியும். தி. மு. கழகம் ஒரு மக்கள் இயக்கம். காமராசர் போன்றவர்களால்கூட அந்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த முடியாது.

# ஒரே வழி!

இலங்கைத் தமிழர்! அவர்களை எண்ணும்போதெல்லாம் உள்ளம் வேதனையடைகிறது. அவர்தம் நிலையோ மிகக் கேவலாக உள்ளது! சொந்த நாடின்றி—வெறும் சோற்றுப் பிண்டங்களாக அங்கியர்கள் நிழலில் வாழ்க்கையுடன் போராடிக் கொண்டிருக்கும் அந்தச் சகோதரர்களின் துயரத்தைக் கேட்கும்போது கண்களில் நீர் தளும்புகிறது! உலகத்திலுள்ள சிறிய, பெரிய நாடுகள் அனைத்திலும் மொழியுணர்ச்சியும், விடுதலை வேட்கையும் கொடிகட்டிப் பறக்கும்போது—இயற்கையிலேயே தன்மான உணர்வும், எவர்க்கும் தாழ்ந்து போகாத வீர உணர்வும்—எழுச்சி மனப்பான்மையும் கொண்ட தமிழன்—ஒரு மொழியினருக்கு — குறிப்பிட்ட ஓர் இனத்தவருக்கு அடங்கி ஒடுங்கி அடிமையாய்! அவர்களின் இழிமொழிகளைக் கேட்டும் கேளாக் காதினனாய், அந்த இனத்தவர் தமிழுக்குச் செய்யும் கொடுமைகளைக் கண்டும் குருடனாய் எங்ஙனம் உயிர்வாழ இயலும்? தமிழர்க்கு உரித்தான செயல் அது வல்லவே! இதன் பொருட்டுக் கடல் கடந்த தீவில் நம்மவர் சிங்கள அமைச்சரவையுடன் உயிர்ப் போராட்டம் நடத்திவருகின்றனர்.

இப்படி இலங்கையின் அன்றாட வாழ்க்கை முறையில் எல்லாத் துறைகளிலும் பெரும் பங்கு கொண்டு தங்களுடைய உடலை வருத்தி நல்லுழைப்பை நல்கி இலங்கையை இன்பபுரியாக இன்றைய தினம் மாற்றியமைத்திருப்பதுதமிழர்களின் வலிமை பொருந்திய கரங்கள் தாம்! எல்லாத் துறைகளிலும் தமிழர்கள் வல்லவர்களாகவும், சிறந்த உழைப்பாளிகளாகவும்இருப்பதைக் கண்ட சிங்களவர், இயல்பாக எழும் பொறாமை உணர்வின் வயப்பட்டு கொஞ்சநாட்களுக்கு முன்பு தமிழர்களின்மீது வெறியாட்டம் ஆடினர்! இரவு நேரத்தில், தமிழர்கள் வசிக்கும் வீடுகளுக்குத் தீ வைத்தனர்! தமிழர்களைத் தாக்கினர்! தமிழ்ப்பெண்களை அவமானப் படுத்தினர்! காட்டையும், மேட்டையும் திருத்திக் கழனியாக்கி பொன் நெற் கதிர்களை விளைவிக்கப் பாடுபட்ட தமிழரின் இரத்தம் அருவியாகப் பெருக்கெடுத்து இலங்கையில் ஓடியது. அப்போதும் அவர்களுடைய இனவெறி தணிந்த பாடில்லை.

பொதுவாக, ஊரிலுள்ள ஒருவனுக்கு எவருடைய ஆதரவும் இல்லையென்றால், தெருவில் செல்பவன் கூட அந்த ஆதரவற்றவனிடம் வல்லடி வழக்கிற்கு வந்து மோதுவது

ச. பன்னீர்ச்செல்வம்

இயற்கையானதே! அதுபோன்று—விடுதலை பெற்றுவிட்டதாக உலகெங்கும் முழங்கிக்கொண்டு—டில்லித் தலைநகரினின்றும் உலகின் பற்பல பகுதிகளுக்கும் சமாதானப் புறாக்களைப் பறக்கவிட்டுக்கொண்டு-ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நாங்கள் சாதித்தச் சாதனைகள் பாரீர்! அவைகளைக் கண்டு களித்து உங்களுடைய பொன்னான கருத்துக்களை வாரி வழங்குவீர்!! என்று வெளிநாட்டவருக்கு அன்பழைப்பு விடுத்துக்கொண்டு ஏகாதிபத்திய முறையில் அரசோச்சும் வடவர் அரசு, இலங்கைத் தமிழர்பற்றி இலங்கை அரசுடன் எந்தவிதத் தொடர்பும் கொள்ளாத காரணத்தால்—சுண்டைக்காய் அளவுள்ள இலங்கை அரசினர், தமிழர்களை—புழுதிமேட்டைப் பொன்கொழிக்கும் விளைநிலமாக மாற்றியமைத்த நல்லுழைப்புப் படைத்தவர்களைச் சற்றும் தயக்கமின்றிக் கொடுமைப் படுத்துகின்றனர். தமிழ்மொழிக்கு உரிய இடம் அளிக்க மறுக்கின்றனர். தட்டிக்கேட்க ஆள் இல்லாத காரணத்தால், தமிழர்களின் குறைகள் புறக்கணிக்கப்படுகின்றன. மொழி, இனம், அரசியலமைப்பு ஆகிய ஒவ்வொரு கோணங்களிலும் தமிழர்கள் பழிவாங்கப்படுகின்றனர். இந்த மண்ணில் பிறந்தவர்கள் — தங்களைத் தமிழர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள்-அவ்வளவு ஏன்? நம்முடைய இரத்தத்தைப் பகிர்ந்து கொண்டு நம்முடன் பிறந்தவர்கள், இன்று இலங்கைத் தீவில் சிங்கள வெறியர்களின் தாக்குதலாலும், இன உணர்வு கொண்ட இலங்கை அரசின் கொடுமை நிறை சட்டங்களினாலும், அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கின்றனர். அந்தோ! அவர்தம் குறை களைய, கண்களில் நீர் மல்கத் தமிழகத்தின் திசைநோக்கும் தன்மான வீரர்களின் கண்ணீர் துடைக்க—அவர்களைத் தேற்றி ஆறுதல் கூற, இந்த நாட்டில் அமைக்கப்பட்டுள்ள "பச்சைத் தமிழர்" அமைச்சரவையினாலும் இயலவில்லை. ஆம்! இவர்களுடைய கரங்கள் "பாரத ஒற்றுமை" என்ற பாசக்கயற்றினால் அல்லவா இறுகப் பிணைக்கப்பட்டுள்ளன! இவர்களால் எங்ஙனம் இயலும் எம்மவர் துயர்துடைக்க!

அண்மையில் சபல்பூரில் நடைபெற்ற ஒரு கலவரத்தில் சில முகம்மதியர்கள் தாக்கப்பட்டனர். இதனைக் கேள்வியுற்ற பாகிஸ்தான்

அதிபர் அயூப்கான் மனங்கொதித்து, அந்த நிகழ்ச்சியினை "காங்கோவின்" வன்முறைச் செயலுக்கு ஒப்பிட்டார், காட்டமாகத் தாக்கிப் பேசியுள்ளார். நாம் இங்கு அவர் பேசியது சரியா! தவறு? என்று ஆராய முற்படவில்லை. பாகிஸ்தானத்திலுள்ள ஒரு முகமதியருக்கு, சபல்பூரில் தாக்கப்பட்ட முகம்மதியர்கள் மீது ஏற்பட்ட அனுதாபம், டில்லியிலுள்ள இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத்திற்கோ, உலக சமாதானப் பேரொளி நேரு பிரானுக்கோ இலங்கையில் கொடுமைப்படுத்தப்படும் தமிழ்மக்கள்பால் அனுதாபமோ, இரக்கமோ, தயை உணர்ச்சியோ ஏன் ஏற்படவில்லை? என்றுதான் கேட்கவிரும்புகிறோம்.

ஏக இந்தியாக்காரர்கள் வடவர் வேண்டுமானால் கவலைப்படாமல் இருக்கலாம்! தமிழர்களுக்காகவே, அமைக்கப்பட்டிருக்கும் அமைச்சரவை இதுபற்றி இதுவரையில் என்ன உருப்படியான நடவடிக்கை எடுத்திருக்கிறது? சொல்லிக்கொள்ளும்படியான நல்லசெயல் எதுவுமே ஆற்றப்படவில்லை! பாகிஸ்தானத்தினின்றும்வெளியேறியஅகதிகளானால் அவர்களுக்குத் தொழில் துறை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கமுடியும் இந்தப் பேரரசினால்—காஷ்மீரில் அல்லற்பட்டுத் திரும்பிவந்தவரானால் அவருக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கப்படும். சீனர்களின் பிடியில் சிக்கிவிடுவோம் என்று அஞ்சி ஓடிவரும் திபேத்தியர்களுக்கு அடைக்கலம் கொடுக்கத் தயார்! தலாய்லாமா கும்பலுக்குத் தினம் ஆயிரக்கணக்கில் கொட்டியழத்தயார்! ஆனால், இலங்கையிலிருந்து ஒருவர் வந்துவிட்டால், அவரைக் கவனிக்க இந்த அகண்ட இந்தியாவில் நாதிகிடையாது. இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் நாம் தலையிடுவது முறையாகாது என்று பஞ்சசீலப் பண்டிதர் பேசுகிறார்.

இந்தியப் பேரரசின் நிலைதான் இதுவென்றால்—தமிழக அமைச்சர்களோ! நாட்டுநலன், இனஉணர்ச்சி, மொழிப்பற்று இவை சிறிது கூட இல்லாத—ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளாகத்தான் அரசு நடத்தி வருகின்றனர். இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி என்றாவது இவர்கள் டில்லியுடன் வாதாடியிருக்கிறார்களா? என்றால், இல்லை!

இலங்கைத் தமிழர்கள்பற்றி நாம் பேசாத கூட்டங்களே இல்லை என்றாலும், செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று ஆட்சியாளருக்கு நாம் விடுத்த கோரிக்கைகள், திட்டங்கள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டன. இங்கிருப்போர், அங்கே என்னதான் நடக்கிறது என்று அறிய முற்படாத வரையில், இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்க்க முடியாத பெரும் தொல்லையாகத்தான் இருக்கமுடியும். "எம்மவர்க்கு இழைக்கப்படும் அநீதியை எங்களால் தாளமுடியாது! சிங்களவர்களைப்போன்று தமிழர்களுக்கும் அரசியல், சமுகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் உரிமையும், சமத்துவமும் அளிக்கப்படவேண்டும். கடுமையான சட்ட முறைகள்மூலம் இவை நிறைவேற்றப்படவேண்டும். இம்முறை இயலாதது என்று சிங்கள அமைச்சரவை கருதுமானால் — இலங்கையை இரண்டாகப்பிரித்து, தமிழர் வாழும் பகுதிகளைத் தனிநாடாக்கவும், சிங்களவர்வாழும் இடங்களைத் தனி நாடாகவும் ஆக்கவேண்டும்! இல்லையேல் எங்கள் குரல் இலங்கைத் தமிழர்க்கு ஆதரவாக ஜனநாயக முறைப்படி உலக நாடுகளின் மன்றத்தில் ஒலிக்கும்" என்று எப்போது தமிழகத்தில் முழங்கப்படுகிறதோ, அப்போதுதான் இலங்கையின் இருண்ட அரசியல் வானத்தில் ஒளி நிறைந்த விடிவெள்ளி தோன்றும். தமிழர்களின் குறைகள் நீங்கும்.

தட்டிக்கேட்க சக்தி இருக்கிறது என்றால் தருக்கனும் அஞ்சுவான் அல்லவா? எனவே, உயிர் பெரிதல்ல! உரிமைதான் பெரிது! அதன் பொருட்டு உணர்ச்சியுடன் போராடுங்கள்—வெற்றி நிச்சயம்.

எதிர்பாருங்கள்!

டி. கே. சீனுவாசன்

அளிக்கும்

# "தீயும் தென்றலும்"

என்ற தொடரோவியம்

விரைவில்

"திராவிட நாடு" இதழில் வெளிவர இருக்கிறது.

# சிறுகதை மன்னர் மாப்பசான்

—(லூர்து. ஜேம்ஸ்)—

நாகரிகப் போக்கு எவ்வளவு தீவிர மாக மாறினுலும் இலக்கியத் துறையில் சிறுகதை தன் மதிப்பை இழந்துவிடாது என்று துணிந்து கூறலாம். நாடகம், நவீனம், காவியம், கவிதை முதலிய இலக்கியத்தின் மற்ற துறைகளைக் காட்டிலும், சிறுகதை எட்டிப் பிடிக்க முடியாத வளர்ச்சியைப் பெற்றிருப்பதே இதற்குப் போதிய சான்ருகும். சிறந்த சிறுகதை எந்தக் காலத்திலும் மனித இதயத்தை நெகிழ்விக்கும் தன்மையது.

சிறுகதை எழுதுவதற்குச் சிறந்த மனப்பண்பும், எழுதுக்களை ஆளும் திறனும், எல்லாவற்றிற்கும் மேலாக நிகழ்ச்சிகளைத் தன்வயப்படுத்திப், பாத்திரங்களுடன் ஒன்றுபடுத்தும் மனேபாவமும் வேண்டும். இல்லையென்ருல் சிறுகதை வெறும் சம்பவ வர்ணனையாகத்தான் இருக்கும். ஏனெனில் சிறுகதையின் நிலைக்களன் ஒரு சாதாரண சம்பவமே. மற்றவர்களுக்குச் சாதாரணமாகத் தோன்றும் சம்பவம் எழுத்தாளனைப் பொறுத்த வரையில் சிறந்த கற்பனைக் கருவூலமாக உருவெடுக்கிறது. அதைக்கொண்டு சாகாத சிறுகதையை உண்டாக்கி செய்துவிடுகிருன். பிறகு அவன் மறைந்தாலும் அவன் படைப்பு அவன் பெயரைச் சொல்லிக்கொண்டு நிற்கிறது.

சிறுகதை இலக்கியத்தை வளப்படுத்தியவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் பலர் இருக்கிருர்கள். உலக வரலாற்றில் நாகரிகப் பெருமைக்கும் கலைச் சிறப்பிற்கும் பெயர் வாய்ந்த பிரான்சு நாட்டை எடுத்துக்கொண்டால், நம் முன் வந்து நிற்பவர் மாப்பசான்.

மாப்பசான் 1850-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 5-ம் நாள் டைப்பி அருகே பிறந்தார். இளமையிலேயே அரும்பிய இலக்கிய உணர்வும், சிறந்த எழுத்தாளரான ப்ளாபர்ட்டின் கூட்டுறவும் சீக்கிரத்திலேயே அவரை எழுத்து வேந்தராக மாற்றியது. சரக்குத் தரகரின் திருப்புதல் வழியப் பிறந்து எழுத்தாளராக மாறிய மாப்பசானின் எழுத்து வளர்ச்சி, முதிர்ச்சியெல்லாம் பத்து ஆண்டிற்கு இடைப்பட்டதுதான். ஆனல், கொடுத்து வைக்காத எழுத்துலகம் இவரை அவரது நாற்பத்து மூன்ரும் வயதிலேயே இழந்தது. வாழ்க்கையை அதீதமான முறையில் அனுபவித்ததே அவரது அகால மரணத்திற்குக் காரணம்.

மாப்பசானின் உலகம் சிறுகதை உலகம் என்று நாம் உணரவேண்டும். இல்லையென்ருல் மூடப்பட்ட புத்தகமாகவே அவர் காட்சியளிப்பார். அவருடைய சிறுகதைகளில் 'தந்தையும்' 'நெக்லசும்' தரமானவை. வைர நெக்லஸ் என்ற கதையில் போலி வாழ்வு வாழ்கின்றவர்களைப் படம் பிடித்துக் காட்டுகிருர். ஏழையாகப் பிறந்துவிட்ட அழகியொருவள் மந்திரி தரும் விருந்திற்கு கணவனுடன் செல்கிருள். சிநேகிதியொருவளிடமிருந்து இரவல் வாங்கிய நெக்லஸ் அவள் மணிக் கழுத்தை அலங்கரிக்கிறது.

விருந்து முடிந்து, வண்டிக்காக அலைந்து, கடைசியாக வீடு வந்து சேர்கிருர்கள். வீட்டில் நெக்லஸ் காணுமற்போனது தெரியவருகிறது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. வாங்கிய பொருளைத் திருப்பித் தர வேண்டுமே என்பதற்காக 36,000 பிராங்குக்கு கடன்வாங்கி, நெக்லஸ் ஒன்று இரவல் வாங்கியதே போன்று வாங்கிக் கொடுத்துவிடுகிருர்கள். வாங்கிய கடனை அடைக்க எல்லா வசதியையும் குறைத்துக்கொள்கிருள் மனைவி; தானே எல்லாவேலையையும் செய்கிருள். கணவனே அதிகநேரம் உழைத்து வருவாய் ஈட்டுகிருன். பத்துவருடம் பிடிக்கிறது கடன் அடைபட, அதன்பின் சிநேகிதிகள் இருவரும் தற்செயலாக சந்திக்கின்றனர். பத்துவருடத்தில் முதிர்ச்சியடைந்த காரணம்பற்றி வினவுகிருள் நெக்லசை கொடுத்தவள். இரவல்வாங்கியவளோ, 'உன்னுல்தான்' என்று நடந்தவற்றை விளம்புகிருள். அதைக்கேட்ட அவள், "என்நகை போலியாயிற்றே! ஐந்நூறு பிராங்குதானே பெறும்!!" என்று அங்கலாய்க்கிருள். நாகரிக வாழ்வின் போக்கைச் சாடும் அந்தக் கதை பிறருக்காக வாழ்வதை மறந்து, தனக்காக வாழக் கற்றுக்கொடுக்கிறது.

மாப்பசான் உள அடிப்படையில் கதைகளை அதிகமாக அமைக்கவில்லை. அவர் முக்கியத்துவம் கொடுத்ததெல்லாம் புறக்கண்களுக்குப் புலப்படும் கதையின் கருவிற்குத்தான். பிரஞ்சுநாட்டின் சிறுகதையுலகில் புகழ்வாய்ந்த எழுத்து வேந்தராகத் திகழ்கிருர் மாப்பசான். சிறுகதை இலக்கியம் அழியும்வரை மாப்பசானின் புகழ் நின்று நிலைக்கும் என்பது உறுதி.

★

## காரணம்!

"பெண்களுக்கு என். சி. சி. போன்ற அமைப்புகளில் இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அண்மையில் நடைபெற்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பெண்கள் எண்ணிக்கை நாட்டில் குறைந்து போனதற்கு மேற்சொன்ன அமைப்புகளின் மூலம் பெண்களை, ஆண்களாக மாற்றுவதும் ஒரு காரணம்."

முன்னுள் தளபதி:
கரியப்பா.

# “காதற் காட்சி”

—[ச. கனகராசன்]—

முரசம் ஒலித்தது! மங்கல முழக்கம் யாங்கணும் முழங்கியது! ஒலி கேட்டு ஓடினாள் பாவை யொருத்தி, வெளியே. ‘ஒலி முழக்கம்’ ஏன்எனஅப்பக்கத்திலுள்ளோரை வினவினாள். மாறன் உலா வருகிறான் என்றும், அதற்காகத்தான் முரசு ஒலிக்கிறது என்றும் அறிந்தாள். மாறன் என்றவுடன் மகிழ்ச்சியால் தூரத்தில் வரும்போதே நோக்கினாள். மணங்கமழும் மாலையை மார்பில் அணிந்த மாறன் அவள் வீட்டை நெருங்கினான். அவன் அழகுகண்டு, அக்கயல் விழியாள் ஆச்சரியமுற்று அவனையே நன்ருகப் பார்த்துக்கொண்டிருந்தாள். மாறன் அமர்ந்திருந்த அலங்கரிக்கப்பட்ட தேரும் அவள் வீட்டை விட்டு நகர்ந்து போய்கொண்டிருந்தது. அவன் அழகில் மயங்கி, அவன்மீது தீராத காதல் கொண்டாள். அவன் தன்னைக் காதலித்து விட்டதாகவும், அவனையே மணக்க வேண்டுமென்றும் எண்ணித் தாங்கொணு மகிழ்ச்சியில் ஆழ்ந்தாள்.

•

இரவு முழுவதும் அவனையே நினைத்த வண்ணமிருந்ததால் உண்ணவும் முடியவில்லை; உறங்கவும் முடியவில்லை. படுக்கையில் சிந்தனையிலாழ்ந்தவாறு படுத்திருந்தாள். சற்று நேரம் உறக்கம் வந்தது. அவளருகில் வந்து நின்றான், மாறன்.

“இன்பமே” என்றான்.

“அன்பரே! ஆவலோடு எதிர் பார்த்திருந்தேன்—என் ஆவலைத் தீர்க்க வருவீர்கள் என்று” என்றாள் அவள்.

“இன்று மாலை உன்னைப் பார்த்ததிலிருந்து உன் நினைவில் உன்னைக் காண ஓடோடி வந்தேன் கண்ணே!”

“அன்பரே! நம் காதல் ஈடேறி விட்டதல்லவா?”

“ஆம் கண்ணே! நாம் காதல் கீதம் பாடிக் களிப்போம். வெண்ணிலா தண்ணொளி பரப்பிக்கொண்டிருக்கும் இந்த இரவு நமக்கு இன்ப இரவாகட்டும். இன்றுபோல் என்றும் கிடைக்காது. எழுந்துவா என்னருகில்” என்று அவளது அழகிய கைகளைப் பிடிக்கிறான்.

“இன்பம் சுவைப்போம்! இன்னிசை பாடுவோம்! மாறனைத் தழுவி மகிழ்ச்சி கொள்வோம்!” என்றெண்ணி எழுந்திருக்கிறாள். நாற்புறமும் பார்த்தாள். மாறனைக் காணுது மனவேதனையடைந்தாள். அப்போதுதான் உணர்ந்தாள், தான் கண்டது கனவு என்று. அப்புறம் அவளுக்கு உறக்கமே வரவில்லை.

காலை மலர்ந்தது! இரவு நிகழ்ந்ததை எண்ணியெண்ணி வேதனைப் படுகிறாள். தலைவியைக் காணத் தோழி வந்தாள். சோர்வுடனிருந்த தலைவியைக் கண்டாள். தோழி கேட்டாள்.

தோழி:- என்றுமில்லாமல் இன்று ஏன் சோர்வுற்றிருக்கிறீர்கள். காரணமென்ன?

தலைவி:- இரவு முழுவதும் தூங்கவில்லையடி. உறக்கம் வரவில்லை.

தோழி:- மாறனின் நினைவாகவே யிருந்தால் எப்படி உறக்கம் வரும்?

தலைவி:- போடி குறும்புக்காரி! என் மனதையறியாமல் நகைக்கிருயே!

தோழி:- அப்புறம் ஏன் சோர்வுற்றிருக்கிறீர்கள்? காரணத்தைச் சொல்லுங்களேன்.

தலைவி:- மாறன் நினைவாகவேயிருந்தேன். என் நினைவு எப்படித் தெரிந்ததோ, அவரே நேரில் வந்துவிட்டார்! அதனுல் தூக்கமே வரவில்லை. என் மனமும் சரியில்லை.

தோழி:- இங்கேயே வந்துவிட்டாரா? அப்படியென்ருல் நன்ருக அளவளாவி, இருவரும் ஆரத் தழுவி இன்பந் துய்த்திருப்பீர்களே! இதற்கு ஏன் இப்படிச் சோகமாக யிருக்கிறீர்கள்!

தலைவி:- நான் சொல்வதற்குள் அவசரப்பட்டு ஏதேதோ உளறுகிருயே! இரவு அவர் என் கனவில்வந்தாரடி! ‘கனிமொழியாளே’ என்ருர், ‘காதல் ரசமே’ என்ருர். இன்னும் ஏதேதோ இன்பமொழி பேசினர். இன்பப் போதையால் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. என்னருகில் வந்து என் கரத்தைப் பற்றினர். எல்லாம் உண்மையாக நடப்பதாக எண்ணிக் கண்விழித்துப் பார்த்தேன். என் கரத்தைப் பற்றிய அவரைக் காணவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தேன். அந்த வடிவழகனைக் காண முடியவில்லை. தோழி! நான் என்னவென்று சொல்வேன். நான் நல்வினையொன்றும் செய்யாதவள். நனவில் அவரைத் தழுவும் பேறு கிடைக்காவிட்டாலும், கனவில்கூட அவரைத் தழுவும் வாய்ப்பை இழந்தேனடி. தழுவும் வாய்ப்பைத்தான் இழந்திட்டாலும், அந்த இன்பக் கனவையும் அதிக நேரம் அனுபவிக்க முடியாமல் இழந்தேனடி!

கற்பனை கலந்த இந்தக் காதற் காட்சியை முத்தொள்ளாயிரம்என்ற சொல்லோவியத்தில் காணலாம். அப்பாடல் இதோ:-

ஓராற்ருன் என்கண் இமைபொருந்த
அந்நிலையே
கூரார்வேல் மாறன் என் கைப்பற்ற—
வாரா
நனவென் றெழுந்திருந்தேன் நல்வினை
யொன்றில் லேன்
கனவும் இழந்திருந்த வாறு.

# திருப்பணி

ஊருக்கு அருகில் பாட்டை ஓரமாக எடுப்பானதொரு இடத்தில் இருக்கின்ற அந்த ஒன்றரைக் காணி நிலம் நல்லானுக்குச் சொந்தம். அந்த நிலம் அந்த ஊரில் உள்ள அத்தனை குடியானவர்களையும் கவர்ந்திருந்தது. அந்த ஊரிலே சில்லறைத்தனமாக நடந்து அதன் மூலம் பெரிய மனிதனாகிவிட்ட வீரப்பனுக்கு எப்போதுமே அந்த நிலத்தின் மீது ஒரு கண். நல்லானிடம் எப்படி எப்படியோ அவன் பேசிப்பார்த்தான்—அவனிடமிருந்து நிலத்தை வாங்கிவிடுவதற்கு.

நல்லான் ஒரேயடியாகச் சொல்லிவிட்டான் "எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும் இந்த நிலத்தை விற்கிற எண்ணமோ, ஈடுவைக்கும் நினைப்போ என்னிடம் ஒரு காலமும் ஏற்படாது. என் உயிர் உள்ளவரை இதை என்னிடமிருந்து பிரிக்கமுடியாது'' என்று அழுத்தந்திருத்தமாக.

'இவனிடமிருந்து இந்த நிலத்தை எந்த வகையிலாவது பறித்துக் கொள்ளாமல் விடுவதில்லை' என்று அந்த நிலத்தின் பக்கம் வரும்போதெல்லாம் வீரப்பன் கறுவிக்கொண்டிருந்தான். நல்லானிடம் அந்த நிலம் இருப்பது வீரப்பன் தலைமீது பெரியதொரு பாறுங்கல் எப்போதும் இருந்துகொண்டு அவனை அழுத்துவது போன்றதொரு உணர்வை அவன்பால் ஏறியிருந்த அழுக்காறு உண்டுபண்ணிக்கொண்டிருந்தது. சமயம் பார்த்துக்கொண்டிருந்தான் அவன். வஞ்சிப்பது எவ்வாறு, அதன் வழி எண்ணியதை முடித்து வெற்றிகாணுவது எவ்வாறு என்று ஓய்தல், ஒழிதல் இன்றி அவன் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

அன்று நடுப்பகல் ஊரே அரவமில்லாமல் ஒடுங்கிக்கிடந்தது. அது வேலைமிகுந்த காலம். ஊரில் உள்ள உழைக்கும் ஆற்றல் படைத்தவர்களோடு அவ்வாற்றல் இல்லாத முதியோர், குழந்தைகள் — ஆக அனைவருமே காடு கழனிகளுக்குப் போயிருந்தனர். வீரப்பன் கூடக் காட்டுக்கும், கழனிக்கும் போயிருந்தவன்தான். ஆனால், வெயில் உச்சிக்கு வருமுன் வீட்டுக்கு வந்துவிட்டான். என்றும் ஓய்வில்லாத உள்ளம் அன்றுமட்டும் ஓய்ந்துவிடுமா? மனத்தைச் சூழ்ச்சிச் சிந்தனையில் இலயிக்கவிட்டபடி மெல்ல நடந்து வந்துகொண்டிருந்தான் சாவடிப் பக்கமாக அவன்.

அப்போது அவன் எதிரில் ஒருவர் வந்தார். கருமையும், வெண்மையும் கலந்து–அடர்ந்திருந்த தாடி, மீசை.

**❊ கனகு ❊**

பரபரப்போடு அடிக்கடி சுற்றுமுற்றும் பார்க்கும் கண்கள். நீண்ட காவியுடை. கழுத்திலே உருத்திராக்க மாலை, கையிலே கமண்டலம், கட்கத்திலே தண்டு. சிறியதொரு மூட்டை, அடியிலே பாதக்குறடு– ஆக இந்தக்கோலத்தில்.

"வணக்கம் வீரப்பா.''

வீரப்பன் காதில் அது விழவில்லை.

"நிமிர்ந்துகூடப் பார்க்காமல் அப்படி என்னப்பா தீவிரமாக யோசித்துக்கொண்டு வருகிறாய்?''

அதற்குள் வீரப்பன் சாமியார்மீது மோதிக்கொள்பவன்போல் அவரை நெருங்கி வந்துவிட்டான். பிறகுதான் நிமிர்ந்து பார்த்தான்.

விந்தையால் விரிந்த கண்களோடு சாமியாரை ஏறிட்டு நோக்கினான் வீரப்பன். அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. 'யார் இந்தச் சாமியார்? என்னை அறிந்தவர்போல் அழைக்கிறாரே!'—அவன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். தன் நினைவுக்கு எட்டிய தொலைவில் எல்லாம் சுற்றிச் சுற்றிச் சிந்தனையை ஓடவிட்டுப் பார்த்தான். அந்த உருவத்தை எங்கேனும் கண்டு அறிமுகம் கொண்டதாக அவனுக்குத் தோன்றவில்லை. ஆனால், அந்தக் குரல், அந்த முகச்சாயல், பனிப் படலத்துக்குள் மறைந்து நின்றபடி ஏதோ ஒன்று எட்டிப்பார்க்கும் உணர்வை, அவன் உள்ளத்தில் பாய்ச்சின. ஆனால், அது என்னவென்று அவனுக்குப் பிடிபடவில்லை. திகைத்தாற்போல் சாமியாரை உற்று நோக்கிக்கொண்டு நின்றான் அவன்.

"என்னப்பா, என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லையா உன்னால்? பலே, அந்த மட்டும் வெற்றிதான் எனக்கு'' என்று சாமியார் வீரப்பன் முதுகில் 'தட்டிக் கொடுத்த வண்ணம் கெக்கொலி போட்டுக்கொண்டு கூறினார்.

வீரப்பனுக்கு இன்னும் பிடிபடவில்லை.

"சரி, சரி. வா அப்படிச் சாவடியில் உட்கார்ந்துகொண்டு பேசுவோம்'' என்று வீரப்பனை இழுத்துக் கொண்டு போனார் சாமியார்.

வீரப்பன் சாமியாரை வேடிக்கை பார்ப்பவனைப்போல் அசையாமல் நின்று பார்த்துக்கொண்டிருந்தான். அவன் எண்ணம் எங்கெல்லாமோ போய்ப்போய் மீண்டது.

"உட்கார் வீரப்பா!" என்றார் சாமியார். வீரப்பன் உட்கார்ந்தான்.

"என்னப்பா, என்னை யாரென்று தெரிகின்றதா?" என்று வினவிய சாமியார், வீரப்பன் காதருகிற்போய்

"நான்தான்........." என்று எதையோ கிசுகிசுத்தார்.

வீரப்பன் துள்ளிக் குதித்தான்.

"சரி. வா, வீட்டுக்குப் போகலாம்" என்று எழுந்த வீரப்பன் திரும்பவும் அமர்ந்தான். அவனுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. 'ஏன் அப்படிச் செய்தால் என்ன?' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

"என்ன அது?" என்றார் சாமியார்.

"இல்லை. அந்த........."

இப்போது வீரப்பன் சாமியார் காதோடு ஏதோ சொன்னான்.

"ஓ, அதுவா? இந்தத் தடவை அதை முடித்துவிடலாம்!" என்றார் சாமியார்.

"ஆ, ஆ, ஆ!"—இருவரும் கெக்கொலியிட்டுச் சிரித்தனர்.

அன்று மாலை ஊரே ஒருமிக்கச் சாவடியில் கூடியது—சாமியாரைத் தொழவும், நல்லாசி பெறவும்.

சாமியார் ஆசி மட்டுமா கூறினார்! புள்ளி வைத்தாற்போல் அங்கு கூடி நின்றார் ஒவ்வொருவரின் கடந்த காலத்தையும், நிகழ் காலத்தையும், அதன் வழி எதிர் காலத்தையும் கணித்துக் கணித்து எடுத்தெறிந்து கொண்டிருந்தார்.

திடும் என்று எழுந்தார் அந்தச் சாமியார். சுற்றுமுற்றும் பார்த்தார். சட்டென்று ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டார்;—தலைமீதல்ல; எல்லார் மனத்திலும் ஒரு சேர.

"இந்த ஊரில் உள்ள எல்லாரும் ஒரு பெரும்பழியைச் சுமந்து கொண்டு திரிகிறீர்கள்! மிகப் பெரிய கொடுமையொன்றுக்குப் பாத்திரமாகிக் கொண்டிருக்கிறீர்கள்! அது அடாது. உங்களைச் சும்மா விடாது. அதனால் வெள்ளமே வராத இவ்வூர்க்கு வெள்ளம் வரப்போகிறது, ஊழி வெள்ளம். நில நடுக்கத்தையே கண்டறியாத இந்த நாட்டுக்கு—இந்த ஊர் புரிந்த குற்றத்தால் பூகம்பமே வந்துவிடப் போகிறது.

"இதற்கு உடனே மாற்றுக் கண்டு பிடித்தாகவேண்டும்! என்ன சொல்கிறீர்கள்?"

அங்கே சூழ நின்ற பேதையர் அனைவரும் அலறிப் புடைக்கத் தொடங்கிவிட்டனர் — அப்போதே பெருவெள்ளம் வந்துவிட்டமை போல்; நில நடுக்கம் கண்டு விட்டமைபோல்.

"இங்கே ஒரு உண்மையைக் கண்டு பிடிக்கவேண்டும். அந்த உண்மை உங்களில் யாருக்கேனும் தெரியுமா?"

ஒவ்வொருவரையும் பார்த்து வினவினார் சாமியார்.

மறுமொழி பகர்ந்தார் யாருமில்லை.

"வீரப்பா! உனக்குக்கூடத் தெரியாதா?"

வீரப்பன் திகைத்தான்.

"ஏன் அஞ்சுகிறாய்? நடந்ததை நடந்தபடி சொல்லிவிடு! — ஓராண்டுக்கு முன் ஒரு தடவையும், பின்னர் ஆறு திங்களுக்கு முன் ஒரு முறையும் உன் கனவில் எம்பிரான் வந்தது உண்மையா?"

"ஆம் சாமி, வந்தார்."

"அப்பனே, என் ஆலயத்தையும்' அதற்குள்ளிருக்கும் என்னையும் உங்கள் ஊரில் புதைத்து வைத்திருக்கிறீர்களே, இது நியாயமா? என்னைத் தோண்டி எடுங்கள். எனக்கொரு ஆலயம் கட்டித் தாருங்கள்.' என்று உலகு புரப்பவன் கேட்டது உண்மையா?"

"ஆமாம் சாமி."

"எனக்குக் கோயில் கட்டும் நாளைத் தள்ளிப் போடாதீர்கள். அப்படித் தள்ளிப்போடும் ஒவ்வொரு நாளும் என் பொறுமையைச் சோதிக்கும் நாள். எனக்குக் கோபம் வந்தால் நீங்கள் தாங்கமாட்டீர்கள். பார்த்து நடந்துகொள்ளுங்கள்" என்று ஆண்டவன் சொன்னதெல்லாம் உண்மையா?

"ஆம் சாமி, எல்லாம் உண்மைதான் சாமி!"

"ஏன் அப்போதே ஊரைக் கூட்டி எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லவில்லை?—இதற்கு நீ பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்!" காட்டுக் கூச்சல் போட்டார் சாமியார்.

"ஆமாம், பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்."

அங்கே குழுமிநின்ற கூட்டம் ஒருமிக்கக் குரல் கொடுத்தது மட்டுமல்ல, வீரப்பனைச்சாடும் மெய்ப்பாட்டோடு அவனைச் சூழ்ந்து வரவும் தொடங்கிவிட்டது.

வீரப்பனுக்கு உதறலெடுத்தது. கரங்களைத் தலைக்குமேலே உயர்த்திக் கூப்பிக்கொண்டு சாமியார் அரு

## சோஷலிசத்தின் கேலிக்கூத்து
## புதிய பட்ஜட்

"நிதியமைச்சர் மொரார்ஜிதேசாய் அவர்கள் ஒவ்வொரு பொருள்களின்மீதும் காணிக்கை கேட்பதின்மூலம், வீட்டு எசமானிகளின் சாபங்களை தேவையற்ற நிலையிலேயே தேடிக்கொள்கிறார். புதியதாக வெளியிடப்பட்டிருக்கும் பட்ஜெட் "சோஷலிசத்தின் கேலிக்கூத்தாகும்.

நாம் எதை வாங்க முற்பட்டாலும் ஆண்டவனுக்குக் காணிக்கை செலுத்தவேண்டும். திட்டங்கள் என்று சொல்லப்படுபவைகளின் பலாபலன்கள் சமுதாயத்தின் முன்னணியில் இருப்பவர்களுக்குத்தான் போய்ச் சேர்கிறது என்ற பேருண்மையை நிதியமைச்சர் நன்கு உணர்ந்திருந்தும், சாதாரணமானவர்கள் தியாகம் செய்யவேண்டும் என்று கூறுவது அர்த்தமற்ற பேச்சாகும்.

அதிகாரம், செல்வம் இரண்டும் வியாபாரம் நடத்தும் ஒரு சில கம்பெனிகளிடத்தில்தான் குவிந்து கிடக்கிறது. வியாபாரத் தொழில் துறையில் உள்ள விரும்பத்தகாத சக்திகளை எல்லாம் சர்க்கார் ஊக்குவித்துக்கொண்டே வருகிறது.

பொதுமக்கள் பணம் தவறானமுறையில் பயன்படுத்தப்படுகிறது என்று சான்றுகள் வேண்டுமானால், குற்றப் பதிவேட்டிலே உள்ள ஒரு கம்பெனிக்குச் சர்க்கார் ரூ. 23-கோடிக்கு காண்டராக்ட் வழங்கியுள்ளனர் என்பதுபோன்று எத்தனையோ எடுத்துக்காட்டமுடியும்."

**ஆச்சாரியா கிருபளானி**
*பாராளுமன்றம், 15--3--1961.*

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

கில் ஓடிவந்தான் ஆவேசங்கொண்டு விட்டவனைப்போல்.

"சாமி! இத்தனை நாளும் நான் உண்மையை மறைத்துவைத்தது சாமிக்குத் துரோகம் பண்ணவேண்டும் என்ற நோக்கத்திலே அல்ல! ஊருக்கெல்லாம் கெடுதி செய்துவிட்டு நான் மட்டும் எப்படி நன்றாக வாழமுடியும்? ஆனால்.........அந்த நிலம்......"

வீரப்பன் நிறுத்தினான்.

"நிறுத்தாதே! முழுவதையும் சொல். சீக்கிரமாச் சொல்! எது அந்த நிலம்? யாருக்கு அது சொந்தம்?" என்று பக்தி பரவசத்தில் வீழ்ந்து கிடந்த பல குரல்கள் ஒலித்தன.

"அந்த நிலம் ஊருக்கு அருகில் இருக்கிற, நல்லான் நிலம்தான். நானே அந்த நிலத்தைப் பல முறை அவனிடம் கேட்டிருக்கிறேன்—என் சொந்தப் பணத்தைக் கொண்டு வாங்கிச் சாமி காரியத்துக்கு அதைக் கொடுத்துவிடலாமென்று. ஆனால், நல்லான் இணங்கவில்லை. அவனை நான் வற்புறுத்தவுமில்லை. பாவம், அந்த நிலத்தை அவன், தன் உயிரைவிட மேலாகக் கருதிப் பாதுகாத்து வருகிறான்."

கூட்டத்தில் யாரும் பேச முன்வரவில்லை. அங்கே அமைதி நிலவியது.

அப்போது சாவடியின் ஒரு மூலையில் நின்றிருந்தான் நல்லான். அவன் ஓடிவந்தான் சாமியாரிடம்.

"சாமி, என் நிலத்தை இப்போதே எடுத்துக்கொள்ளுங்கள். சாமி காரியம் நடக்கட்டும். ஊருக்கு நன்மை வரட்டும். அதனால் என் குடிக்கு என்ன நட்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. சாமி, எடுத்துக்கொள்ளுங்கள்!"

தரையில் விழுந்து வணங்கினான் நல்லான்.

சாமியார் பேசினார் கூட்டத்தைப் பார்த்து:

"நீங்கள் எல்லாரும் நான் சொல்வதை மனநிறைவோடு ஒப்புக்கொண்டுவிட்டீர்கள். அதை நான் நன்றாக அறிவேன். ஆனால், இன்னும் உங்கள் உள்ளங்களை எல்லாம் தெளிவுபடுத்திக் காண்பதற்குச் சோதனையொன்று நிகழ்த்திக்காட்ட விழைகிறேன். அதாவது, எம்பிரான், தனக்குப் புதியதொரு கோயில் குறிப்பிட்ட இடத்திலே எடுக்க வேண்டுமென்று கேட்கிறார் என்பதற்கு எல்லாரும் தெரிந்துகொள்ளும்படியான தொரு அடையாளம் வேண்டுமல்லவா! அந்த அடையாளத்தை நாளைக் காலையிலே அந்த நிலத்தில் நாம் எல்லாரும் காண்போம்! எம்பிரான் அவ்வாறு அருளிச் செய்வான்! அதன் பிறகு நிலத்தை நல்லானிடமிருந்து வாங்கிக்கொள்வோம்!"

சாமியார் அமர்ந்தார். நல்லான் எழுந்து நின்று சாமியாரைத் திரும்பவும் வணங்கினான்; எல்லாரும் வணங்கினர். சாமியார் எல்லாருக்கும் திருநீறு கொடுத்து அருள் பாலித்தார்.

அன்றிரவு அவ்விடமே சாமியார் இருந்தருளி நிட்டைகொள்ளப்போவதாக வீரப்பன் எல்லார்க்கும் அறிவித்தான். அன்று அவர்க்கு வேதிகையளிக்கும் திருப்பெரும்பேறு வீரப்பனுக்கே வாய்த்தது. நிட்டைக்கு இடையூறு இல்லாமல் எல்லாரும் அவ்விடமிருந்து நீங்கினர்.

நல்லான் வந்தான் தன் வீடு நோக்கி. வீட்டில் அவன் தங்கை மகன் செந்தில் வந்திருந்தான்.

செந்தில் நீண்ட நாட்களுக்குமுன் ஊரைவிட்டுப்போனவன். என்ன வேலைசெய்கிறான் அவன் என்பதை நல்லான் அறியான்.

செந்திலிடம் சாமியாரின் விந்தையுரைகள்பற்றி விவரித்து இறும்பூதெய்தியபடி கூறினான் நல்லான். செந்திலும் வியப்புமேலிட அவற்றை எல்லாம் ஒன்றுவிடாமற்கேட்டான்.

மறுநாட்காலை அந்த ஊரிலுள்ள யாருமே எதிர்பாக்கவில்லை அப்படி பொருவிந்தைச் செய்தி அவர்களுக்காகச் சாவடியில் காத்திருக்குமென்று. நாலைந்து காவல் வீரர்கள் புடைசூழ ஒருவன் அங்கே நின்றுகொண்டிருந்தான். அவனுடைய பொய்த் தாடியும், பொய் மீசையும், டோபாத்தலைமுடியோடு கலையப் பெற்றுத் திண்ணைமீது கிடந்தன.

அங்கே நின்றுகொண்டிருந்தவன் முத்தன் எனும் பெயருடைய பழைய கேடி. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பல கொடிய குற்றங்கள் புரிந்து காவல் துறையினர் கண்ணில் மண்ணைத்தூவிவிட்டு எங்கோ தலைமறைவாகப் போய்விட்டவன். வீரப்பனுக்கு மிகவும் வேண்டியவன்.

அதிர்ச்சியால் பித்தம்பிடித்த நிலையில் அங்கே வீரப்பனும் நின்றான்.

திண்ணையின் ஒருபுறத்தில் சிறிய சிலையொன்று சந்தனமும், குங்குமமும் பூசப்பட்டு மாலையணிவிக்கப் பெற்றுக் காட்சியளித்தது.

"எம்பிரான் தனக்குக் கோயில் ஒன்று நல்லானுடைய நல்ல நிலத்தில் எடுப்பிக்க வேண்டும் என்பதை ஊராரிடம் அறிவிக்கும்படி இவர்கள் மூலம் நேற்றுச்சொல்லி இருக்கிறார். பாவம் இவர்கள்! எம்பிரான்தன் வேண்டுகோளுக்கு அறிகுறியாக இந்தச் சிலையை இவர்கள்மூலம் நல்லானின் நல்ல நிலத்திற்கு அனுப்பி இருக்கிறார் நடுநிசி வேளைபார்த்து. இவர்களின் பொல்லாத காலம் எதிர்பாராதவிதமாக எங்களிடம் மாட்டிக்கொண்டுவிட்டார்கள்.

"நாங்கள் மட்டும் வந்திராவிட்டால் இந்தத் திருப்பணி எவ்வளவு சிறப்பாக நடைபெற்றிருக்கும் தெரியுமா?"

போலீஸ் உடையிலிருந்த செந்தில் அப்படிக் கூறியபோது முத்தன் மீதும், வீரப்பன்மீதும் கொண்டிருந்த ஆத்திரத்தைக்கூட மறந்து குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள் ஊர் மக்கள்.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.